# சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள்

## சில அவதானிப்புகள்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள்

—

## சில அவதானிப்புகள்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

EZHUTHTHU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **Title** | *Saivaviththiya viruththichangaththin aarambakala seyarpadukal – sila avathanippukal* |
| **Author** | Somesasundary Krishnakumar |
| **First Edition** | May 2014 |
| © author | |
| **Subject** | Social History |
| **Pages** | xi + 58 |
| **Size** | 14X22cm |
| **Type** | 11point |
| **Paper** | 60gm |
| **Cover** | Art Board |
| **Price** | Rs.100/- |
| **Publishers** | R.Krishnakumar.Ezhuththu Publishers, 15/23 Mari Amman Veethy, Thirunelvely, Jaffna, Srilanka. |
| **Phone** | 0212225100 |
| e mail | krishnakumar1523@gmail.com |
| **Printers** | Co-operative Press, Jaffna, Sri Lanka. |

This paper was originally submitted to the Academic Forum of the Faculty of Arts, Universsity of Jaffna on 30th April 2014.

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means without written permission from the author.

**ISBN 978-955-41-1990-1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

பேராசிரியர் வி.பி.சிவநாதன், பீடாதிபதி கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்
சோ.பத்மநாதன், தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்
பேராசிரியர் பொ.இரகுபதி,தொல்லியல்,சமூக வரலாற்று ஆய்வாளர்
அ.சி.உதயகுமார் வரலாற்று, இலக்கிய, ஆய்வாளர்
ந.ஆனந்தராசா, முகாமையாளர், யாழ்.மா.கூட்டுறவு சபை அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

முதலில் போர்த்துக்கேயர், தொடர்ந்து ஒல்லாந்தர் அடுத்து ஆங்கிலேயர் என அந்நியர்கள் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இம்மண்ணில் ஆதிக்கம் செலுத்தினர். இக்காலத்தில் எமது மொழி, சமயம், பண்பாடு என்பன நலிவுற்றன. அரசியல் மேலாண்மை, வணிகம், ஆகியவற்றோடு மதமாற்றமும் அந்நிய ஆட்சியாளருடைய நோக்கங்களாய் இருந்தன.

மதமாற்றத்திற்குக் கல்வியை ஒரு வலுவான கருவியாக ஆட்சியாளர் பயன்படுத்தலாயினர். போர்த்துக்கேயர் சைவாலயங்களை இடித்து அவ்விடங்களில் தம் தேவாலயங்களைக் கட்டினர். தேவாலங்களுக் கருகே பாடசாலைகள் எழுந்தன. மதம் மாறியவர்களுக்கே கல்வி வாய்ப்புக் கிட்டியது. ஒல்லாந்தர் சற்று நெகிழ்ச்சிப்போக்கைக் கடைப்பிடித்த போதும், மதமாற்றமும் அதற்கான வெகுமதியாக வாய்க்கும் அரச பதவிகளும் அங்கீகாரமும் சுதேசிகளைக் கவர்ந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திற்கு வருகை தந்த மிஷனரிகள் நாட்டின் கரையோர மாகாணங்களில் பாடசாலைகளை நிறுவினர். இப்பாடசாலைகள் கிறிஸ்தவ மயமாக்கலுக்கு வேண்டிய அனைத்தையும் செய்தன. மதமாற்றமானது அந்நிய (ஆங்கில)மொழி மூலக் கற்கையும் மேனாட்டு வாழ்க்கை முறையைக் கைக்கொள்வதையும் உள்ளடக்கியது. கிறிஸ்தவத்துக்கும் ஆங்கில மொழிக்கும் மேனாட்டு வாழ்க்கை முறைக்கும் விசுவாசமாக இருப்போர் அரசாங்கத்துக்கும் விசுவாசமாய் இருப்பர் என்ற மக்காலேயின் எதிர்பார்ப்பு நிறைவேறியமை கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, இம்மும்முனைத் தாக்குதல் எமது பண்பாட்டை வேரோடு கவ்வி வீசுவதைக் கண்டு வீறு கொண்டெழுந்தவரே ஆறுமுக நாவலர். சைவப் பிள்ளைகள் தமது சமயச் சூழலிலேயே கல்வி — அது ஆங்கிலக் கல்வியாக இருந்தாலும் — கற்க வேண்டும் என்பதே நாவலருடைய போராட்டத்துக் குத் தளம் — நியாயப்பாடு.

இந்நோக்கத்தோடு நாவலர் சிதம்பரத்திலும் வண்ணார்பண்ணையிலும் கோப்பாயிலும், புலோலியிலும் சைவ வித்தியாசாலைகளை நிறுவினார். அப்பாடசாலைகளிற் கற்பிக்கப் பொருத்தமான பாடநூல்களை எழுதி அச்சிட்டார். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், முதலிய தக்கோரைக் கொண்டு மாணவர்களைப் பரீட்சித்தார். பன்முகப்பட்ட பணிகளில் ஈடுபட்ட நாவலரால் இதற்கப்பால் செல்ல முடியவில்லை.

நாவலருக்குப்பின் அவர் பணியைத் தொடர்ந்தவர்களுள் த.கைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, சிவசங்கர பண்டிதர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் சைவசமயப்பிரசாரம், நூற்பதிப்பு, கற்பித்தல், முதலிய பணிகளில் ஈடு பட்டனரேயன்றி, பாடசாலைகளை நிறுவவில்லை. 1917இல் கைலாசபிள்ளை நிறுவிய காவிய பாடசாலை ஓர் உயர் கல்வி நிலையம்.

நாவலருடைய கல்விப்பணியை விரிவுபடுத்தி முன்னெடுத்த பெருமை சைவவித்தியா விருத்திச் சங்கத்திற்குரியது. இச்சங்கம் 1923டிசெம்பர் 9ஆம் திகதி உருவானது. சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, சு.இராசரத்தினம், எம்.எஸ்.இராசரத்தினம், எஸ்.சிவபாதசுந்தரம் முதலியோர் இதன் நிறுவுநர்கள். 1961இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் போது சைவவித்தியா விருத்திச் சங்கம் நிர்வகித்த பாடசாலைகள் 187.

அவை தவிர ஆசிரியர் கலாசாலை, சிறுவர் இல்லம் (விடுதிகள்) 2, நெசவுப்பாடசாலைகள் 16, பன்னவேலைப்பள்ளிகள் 13 சங்கத்தால் நடத்தப்பட்டன..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலந் தொட்டு செயலாளராகவும், மனேஜராகவும், சங்கப்பணிக்குத் தம்மை முழுதாக அர்ப்பணித்தவர் சு.இராசரத்தினம் அவர்கள். இந்த அர்ப்பணிப்பின் அடையாளமாக அவர் 'இந்துபோர்ட் இராசரத்தினம்' என்றே அறியப்பட்டார்.

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் அவர்களின் ஆய்வு சங்கத்தின் "ஆரம்பகாலச்செயற்பாடு"களை மையப்படுத்துவதாகக் கூறப்பட்ட போதும், கணிசமானபகுதி, 'சமாசனம்' பற்றிய முரண்பாட்டுக்குச் செலவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சமூகம் சாதி அடுக்குகளை இன்றும் இறுகப் பற்றி நிற்பது காண்கிறோம். யதார்த்தம் இதுவாக, 80 – 90 வருடங்களுக்கு முன்பு சேர்.பொன்.இராமநாதன், சு.இராசரத்தினம் ஆகியோர் எடுத்த நிலைப்பாடு துணிகரமானது என்றே சொல்ல வேண்டும். ஆனால் அப்போதைய யாழ்ப்பாண சமூகத்தில் அதை அமுல் செய்வதில், சைவ வித்தியா விருத்திச் சங்கம் சவால்களைச் சந்தித்ததென்பதும், வரலாற்றுப் பதிவு. கிறிஸ்தவத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்ட மக்கள், அங்கும் தாழ்த்தப் பட்டவர்களாகவே நடத்தப்படுவது குறித்து விரக்தியடைந்ததை டானியலின், 'கானல்' உருக்கமாகச் சித்திரித்துள்ளது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள் குறித்த இக்கட்டுரை, அரச ஆதரவோடு கிறிஸ்தவ மிஷனரிகள் செய்த மதமாற்றத்தை சங்கம் எதிர்த்து நின்றதையும், யாழ்ப்பாணம் தொடக்கம், வன்னி, மலையகம், கிழக்கிலங்கை வரை தன் கல்விப்பணியை விரிவு படுத்தியதையும், ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி அளித்ததையும், சைவாசிரியர்களைப் பயிற்றுவிக்க ஓர் ஆசிரிய கலாசாலை நிறுவியதையும், தொழிற்கல்விக்குப் பாடவிதானத்தில் இடமளித்ததையும், குறிப்பிட்டா லன்றிப் பூரணமாகாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**சோ.பத்மநாதன்**

தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்

30.04.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

'சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள் – சில அவதானிப்புகள்' என்ற இச்சிறு நூல், இது வரை எமக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு, மிகவும் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இது ஒரு வகையில் ஒரு முன்னோடி ஆய்வாகவே கொள்ளப்படக்கூடியது. இந்த விடயம் தொடர்பாக மேலும் பல்வேறு நோக்கு நிலைகளில் ஆய்வுகளை மேற்கொள்ள இடமுண்டு. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் நிலவிய மொழி, சமயம், பண்பாடு, சாதி, இனம் ஆகிய யாவற்றையும் மேவி கல்வி என்பது முதன்மை பெறத் தொடங்குவதையும், அந்த மாற்றத்தின் முகவர்களாகப் பிரித்தானிய காலனித்துவமும், கிறிஸ்தவ மிஷனரிமார்களின் சமய, கல்விச் செயற்பாடுகளும் இடம் பெறுவதையும், அதற்கு எதிர் வினையாற்ற வேண்டியவர்களாக சுதேச மதத்தைச் சேர்ந்தவர்கள் செயற்படும் போக்கினையும், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் காட்டுகின்றன.

இந்த அமைப்பின் ஆரம்பகால செயற்பாடுகள் பற்றிய விபரங்களைப் பெறுவது இலகுவானதாக இருக்கவில்லை. திரு. க.சி.குலரத்தினம் அவர்கள் எழுதிய பத்திரிகைக் கட்டுரைகள் இச்சங்கத்தின் காலச் சூழலையும், செயற்பாட்டையும் விளக்கும் தன்மை கொண்டவை. இது பின்னர் நூல் வடிவம் பெற்றுள்ளது.

அக்காலத்தில் பத்திரிகைகளில் வந்த செய்திகளையும், சங்கத்தின் வருடாந்த அறிக்கைகளையும் வைத்தே இந்த ஆய்வு எழுதப்பட்டுள்ளது. சங்கத்தின் அறிக்கைகளில் 1958ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரிடமும் கிடைக்கும் வகையில் உள்ளது. 1929, 1930, 1933, 1946 ஆகிய ஆண்டுகளின் அறிக்கைகள் கிடைப்பதற்கு அரியனவாகிவிட்டன. அவற்றின் பிரதிகளை திரு.அ.சி.உதயகுமார் தந்து உதவினார். 1961ற்கு முற்பட்ட காலத்து ஏனைய அறிக்கைகள் எதனையும் பெற முடியவில்லை. இவை தவிர இரண்டாம் தர ஆதாரங்களாக ஏனைய ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரையில் உள்ள விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், இச்சங்கம் தொடர்பான மேலதிக ஆதாரங்கள் இருந்தால் வழங்கியுதவு வதன் மூலம், இச்சங்கம் பற்றிய மேலும் பல விடயங்களை எழுதுவதற்கு வாய்ப்பாக அமையும், என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அமைப்பு, 1923 ஆம் ஆண்டு தொடக்கம் 1961ஆம் ஆண்டு வரை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், பாடசாலைகளை அமைத்து, கல்வித்துறையினைப் பரவலடையச் செய்வதில் ஆக்க பூர்வமான செயற் பாடுகளை மேற்கொண்டிருந்தது.

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கிறிஸ்தவ மிஷனரிமார்கள் மேற்கொண்ட கல்வி நடவடிக் கைகள், சுதேச மதத்தவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி யிருந்தது. கல்வி பெறும் பொருட்டு மக்கள் மதம் மாறுகிறார்கள் என்ற எண்ணம் பௌத்த, சைவ மதத்தவர்களிடம் காணப்பட்டது. சைவ சமயத் தவர்கள் மத்தியில் இடம் பெற்ற இந்த உணர்வை ஆறுமுக நாவலரின் சிந்தனைகள் ஆரம்பித்து வைத்தன. அதன் தொடர்ச்சியாக 1888 இல் உருவாக்கப்பட்ட சைவ பரிபாலன சபை என்ற அமைப்பு கல்வி, பத்திரிகை எனப் பல துறைகளில் பங்களிப்புச் செய்திருந்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை நிறுவியதுடன், *'இந்து சாதனம்'* என்ற பத்திரி கையினை, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிட்டமை அச் சபையி னால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். அதன் அடுத்த கட்ட வெளிப்பாடாக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. இந்த விடயத்தில் ஈடுபட்ட செயற்பாட்டாளர்களை வர்க்க அடிப்படையில் நோக்குவதாயின் மரபுவழி உயர்குழாத்தைச் (Traditional Elite) சேர்ந்தவர்களாகவும், புதிதாகக் கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலக்கல்வி காரணமாக மேல்நிலைக்கு வந்தவர்களாகவும் இருந்தனர் எனக் குறிப்பிடலாம். இவர்களில் சிலர் ஏற்கனவே அக்கால அரசியற் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களாகவும், சிலர் பின்னர் அரசியலுக்கு வந்தவர்களாகவும் இருந்தனர். அதுமட்டுமன்றி இவர்களிற் பெரும்பாலானவர்கள் மிஷனரிப்பாடசாலைகளில் தமது கல்வியைப் பெற்றவர்களுமாவர். இவர்களின் நோக்கு நிலை, சமூகத்தில் மாற்றங்களைக் காண்பது என்பதாகவோ, சமூக சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவோ அமையவில்லை. மதத்தையும், மொழியையும், பாதுகாத்தல் என்பதும் அவற்றைப் பேணுவதற்குக்கல்வியைத் தக்க வைத்துக் கொள்வதும் என்பதாகவே இருந்தது. மறுமுகமாகக் கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி பெற்று கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியவர்களாக இருந்தவர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் இருந்து சமூக மாற்றத்திற்கான சிந்தனைகள் வெளிவந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. அக்கால யாழ்ப்பாணத்தின் பிரதான சமூகப்பிரச்சினையாக இருந்தது, சாதி அடிப்படையிலான பாகுபாடும், பாரபட்சமும் எனலாம். குறிப்பாக மாணவர் காங்கிரஸ் அமைப்பினரும், (ஆரம்பத்தில் 'மாணவர் காங்கிரஸ்" என்ற பெயரில் உருவவான அமைப்பு பின்னர் 'இளைஞர் காங்கிரஸ்' எனப் பெயர் மாற்றம் பெற்று, 'இளைஞர் காங்கிரஸ்' எனவே பரவலாக அறியப்பட்டிருந்தது) நெவின் செல்வத்தரை, ஜேம்ஸ் கென்ஸ்மன் போன்றவர்களும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் பற்றிய எண்ணங்கள், செயற்பாடுகள் என்பன யாழ்ப்பாணத்தின் எல்லாப்பகுதிகளிலும் ஒரே தன்மைத்தாக இருந்தன எனவும் கூற முடியாது.

மரபு வழிப்பட்ட சைவ சமயத் தலைவர்கள், அக்காலத்தில் மிகவும் பிரதான பிரச்சினையாக இருந்த சமூக ஏற்றத்தாழ்வு பற்றி, முன்னேற்றமான சீர்திருத்தங்களை முன்மொழியக் கூடியவர்களாக இருக்கவில்லை. குறிப்பாக "கல்விக்குப் பொறுப்பாக இருந்த, முன்னிலை வகித்த சில தலைவர்கள், பாடசாலைகளில், 'சமாசனம்' வழங்கும் விடயத்தில், முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, செயற்படுவதில் தயக்கம் காட்டுபவர்களாகவே இருந்தனர்." என்ற சாந்தசீலன் கதிர்காமர் அவர்களின் கருத்துப் பொருத்தமானதேயாகும். * அது மட்டுமன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பெரும்பான்மையினரான வெள்ளாளர்களும் (வெள்ளாளர் என்பவர்களும் தனியொரு சாதியினரன்றிப் பல உட்பிரிவுகளைக் கொண்டவர்களாயிருந்தனர்.) அவர்களது கருத்துக்களைப் பின் பற்றிய ஏனைய இடைப்பட்ட சாதி நிலையில் இருந்தவர்களும் சமூகத்தில் மாற்றங்களை விரும்பாதவர்களாக இருந்துள்ளனர்.

கிறிஸ்தவ மிஷனரிகளின், செயற்பாடுகள் இவர்களின் செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாகவும், எதிர்ப்புணர்வை ஏற்படுத்துவனவாகவும் அமைந்த வகையில் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தவர்களின் கல்விக்கு நேர்முக மாகவும், மறைமுகமாகவும் பங்களித்திருத்தனர் என்பதும் அவதானத்திற் குரியதாகும். அவர்கள் வழங்கிய ஆங்கிலக் கல்வியின் காரணமாகவே இலங்கையின் பல பாகங்களிலும், பிற வெளிநாட்டு இடங்களிலும் யாழ்ப்பாணத்தவர்கள், பணிநிலைகளைப் பெறுவதில் முன்னிலை வகித்தனர். சைவ வித்தியாவிருத்திச் சங்கம் பாடசாலைகளை அமைத்த போதிலும், சைவப்பிள்ளைகள் யாவரும் இந்தச் சங்கத்தின் பாடசாலை களுக்கு மாறி விடவுமில்லை. பெருமளவு சைவப்பிள்ளைகள் மிஷனரிப் பாடசாலைகளுக்குச் சென்றனர். தரமான ஆங்கிலக் கல்வியை அப்பாட சாலைகளே வழங்கியமை காரணமாக, அப்பாடசாலைகளை மாணவர் களும் பெற்றோர்களும் நாடிச் சென்றனர். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் தரமான ஆங்கிலக் கல்வியை வழங்கக் கூடிய ஆளணி வசதி இருக்கவில்லை.

எவ்வாறிருந்தாலும், ஆரம்பக்கல்வியை வழங்குவதிலும், பரவலடையச் செய்வதிலும் இந்தச் சங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகள் மிகவும் காத்திரமானவை. கிராமப்புறங்களிலும், வசதியற்ற கிராமங்களிலும், கல்வி வசதி பெறச் செய்ததுடன், வசதி குறைந்த பெரும்பாலானவர்களுக்குத் தங்குமிடம், உணவு, உடை, கல்வி, வழிகாட்டல் ஆகிய வசதிகளை வழங்கியமை வரப்பிரசாதமே.

எவ்வாறாயினும், சமூகத்தின் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் ஏற்பட்டிருந்த சமூக விழிப்புணர்வும், அதன் செயற்பாட்டிற்காக ஒத்திசைவுடன் மேற்கொண்ட பங்களிப்புகளும் முக்கியமானவை. பொருளாதார வளம் குறைவாக இருந்த காலத்திலும், சமூகத்தின் முதன்மைத் தேவையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைக் கருதி, அதன் பொருட்டு அவர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகளை மீட்டுப் பார்ப்பது, அவர்களின் முன்னுதாரணத்தை நினைவு கூர்வதாக அமைவதுடன், இப்பொழுது உள்ளவர்களுக்கும், வரப்போகின்ற சந்ததியினருக்கும் சமூக ஈடுபாட்டை வளர்க்கவும், வழிகாட்டவும் உதவும்.

**சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்**

சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

e mail: someskrish@gmail.com

01.05.2014

* 'It Is clear from these resolutions that those responsible for education among whom were some of the leading citizens of Jaffna were hesitant if not reluctant to commit themselves fully to equal seating in schools'(Handy Perinpanayagam Memorial Volume p. 67)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள்

## சில அவதானிப்புகள்

### அறிமுகம்

16ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த போர்த்துக்கேய காலனித்துவ செல்வாக்கு, இலங்கையின் கரையோர மாகாணங்களின் கல்வியில் நிறுவனமயமாக்கத்தின் ஆரம்பத்தினைக் காட்டி நின்றது. இதன் தொடர்ச்சி இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதி வரை நீடித்தது. இதில் சமயசார்புத்தன்மை முதன்மை வகித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சுதேசிகள் மத்தியில் இடம்பெற் மதவீழிப்புணர்வு காரணமாக கல்வித்துறையிலும் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் விளைவாக அவர்கள் சுதேச மத சார்புக் கல்வி நிலையங்களையும் உருவாக்கினர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், கட்டாயக்கல்வியின் அறிமுகம் காரணமாக கல்விக்கான அரசாங்கத்தின் பொறுப்பும் அதிகரித்தது. இவ்வேளையில், தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிய மதம் சார்ந்த கல்வி நிறுவனமே சைவ வித்தியாவிருத்திச் சங்கம். 1923 ஆம் ஆண்டில் இது உருவாக்கப்பட்டது. 1961ஆம் ஆண்டில் அரசாங்கம் பாடசாலைகளை தேசிய மயமாக்கும் வரை பாடசாலைக் கல்வியை வழங்குவதில் ஈடுபட்டிருந்தது. 1923ஆம் ஆண்டு தொடக்கம் விரைவாக வளர்ச்சி பெற்று பெருமளவு பாடசாலைகளை மட்டுமன்றி வேறும் பல கல்விக்கான நிறுவனங்களையும் நடத்தியது. 1929 தொடக்கம் 1962 வரை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியையும் நடத்தியது. இலங்கையில் சைவ சமயத்தவர்கள் மத்தியிலான கல்வி நடவடிக்கைகளில் கணிசமான பங்கினை வகித்த நிறுவனமாக சைவவித்தியாவிருத்திச் சங்கம் விளங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், இந்த அமைப்பு கூடுதலான அளவுக்குக் கல்வியைப் பரவலடையச் செய்வதில் மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கியத்துவம் மிக்கவையாகும். அந்த வகையில் கல்வியை வசதிவாய்ப்பற்ற பகுதிகளுக்கும், சமூகத்தின் வசதி வாய்ப்பற்ற வகுப்பினருக்கும் (குறிப்பாக தாழ்த்தப்பட்ட) வழங்கிய பங்களிப்பினைத் தொகுத்துக் கொள்வதும், அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை மதிப்பீடு செய்வதும் இந்தக் கட்டுரையின் நோக்கங்களாகும்.

## முன்னைய ஆய்வுகளும், ஆதாரங்களும்

இந்த விடயம் தொடர்பாக க.சி. குலரத்தினம் அவர்கள், 1989 ஆண்டின், முரசொலி வாரப்பத்திரிகையில் தொடர் கட்டுரைகளை எழுதியிருந்தார். அவை நூல் வடிவில்[1] "*இந்துபோர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்.*" என 2010ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. அவை இந்த ஆய்வுக்கு பயன்படக்கூடிய தரவுகளை வழங்கப் பெரிதும் உதவுவதாக உள்ளன. இந்த நூலில் சைவ வித்தியாவிருத்திச சங்கத்தின் செயற்பாடுகளை விபரமாக வழங்கியுள்ளார். வேறு சிறப்பு ஆய்வுகள் எவையும் இடம் பெற்றிருப்பதாக அறிய முடியவில்லை. சங்கத்தின் பதிவுகள், அறிக்கைகள் ஆகியவற்றையும், அக்காலத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகைகளில் வெளிவந்த தரவுகளையும் முதன்மை ஆதாரங்களாக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. வரலாற்று ஆய்வு முறைக்கான விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது. சில ஆய்வு நூல்களில் சைவவித்தியா விருத்திச் சங்கம் பற்றிய அடிப்படையான பிழைகள் இடம் பெற்றிருப்பதையும் காண முடிகிறது. இவை கட்டுரையில் பொருத்தமான இடத்தில் விளக்கப்படும். ஆதாரங்கள் ஆங்கிலத்தில் இருக்குமிடத்து, அவற்றின் ஆங்கில மூலத்தில் உள்ளவை குறிப்புக்களாகத் தரப்படுகிறது. இந்தக் கட்டுரையில் கல்வியைப் பரவலடையச் செய்வதிலும், சமூகத்தின் வாய்ப்புக்குறைவாக இருந்த பகுதிகளுக்கு கல்வியை எடுத்துச் செல்வதிலும், மேற் கொண்ட பங்களிப்புகளை அவதானத்திற்குக் கொண்டு வருவதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. 'அனாதைப் பிள்ளைகள்', 'தாழ்த்தப்பட்ட சமூகம்" ஆகிய சொற்றொடர்கள் அக்காலத்தில் அவ்வாறே வழங்கப்பட்டமையால்

[1] குலரத்தினம் க.சி. (2010) *இந்துபோர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்.* யாழ்ப்பாணம்: சைவவித்தியா விருத்திச் சங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைப் பயன்படுத்த வேண்டியதாயிருப்பது தவிர்க்க முடியாத தாயுள்ளது. இச்சொற்றொடர்கள் யாரையும் புண்படுத்தும் நோக்கம் கொண்டு பயன்படுத்தப்படவில்லை.

## இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கல்வி வழங்கலில் ஏற்பட்ட மாற்றங்கள்

பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் கல்வித்துறையில் கூடிய முன்னேற்றம் ஏற்பட்டது. அவர்கள் ஆங்கிலக் கல்விக்கு அதிக முதன்மை வழங்கியதுடன், சமயவிடயங்களில், சகிப்புக் கொள்கையுடைய வராயிருந் தனர். 1870ஆம் ஆண்டு வரை, கல்விச் செயற்பாடுகள் பெருமளவிற்கு புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ மிஷனரிமார்களின் பொறுப்பில் இயங்கின. அதன் பின்னர், கத்தோலிக்க, இந்து, பௌத்த மதத்தவர்களும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர்.

கல்விச் செயற்பாடுகளுக்குப் பணபலமும், ஆளணியும் அத்தியாவசியமாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி நிறுவப்பட்டு, யாழ்ப்பாண இந்துக் கல்லூரிச் சபையினால் (The Board of Hindu College) நடத்தப்பட்டது. பொருளாதார வசதி மிக்கவர்களின் முயற்சிகள் காரணமாகத் தனியார் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டன. திரு. கனகரத்தினம் அவர்களால் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி நிறுவப்பட்டு நடத்தப்பட்டது. பாவலர் துரையப்பாபிள்ளை மகாஜனாக் கல்லூரியை நிறுவியிருந்தார். சேர்.பொன் இராமநாதன் அவர்கள், இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி ஆகிய இரு பெரும் கல்லூரிகளை நிறுவி நடத்தினார். இவை தவிர பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் இருந்தே கிராமங்களில் ஆங்காங்கே பாடசாலை களும் நிறுவப்பட்டிருந்தன.

1901 ஆம் ஆண்டில் இலங்கையில் மக்கட் தொகைக் கணக்கெடுப்பிற்கு பொறுப்பாக இருந்த பொன்னம்பலம் அருணாச்சலம் 1901 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை தொடர்பான விபரங்களை ஆராய்ந்த பின் மக்கள் தொகையில் கால் பகுதியினர் மட்டுமே பாடசாலைக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமளிக்கின்றார்கள் என்ற விடயத்தினைக் கண்ணுற்று, இங்கு ஆரம்பக்கல்விமுறை பெண்கள் உட்பட அனைவருக்கும் வழங்கப்படுவது அவசியம் என்ற கருத்தினை வலியுறுத்தி வந்தார். இதன் காரணமாகவும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகவும் 1906இல் நகரப் பாடசாலை களுக்கான சட்டமும், 1907இல் கிராமியப் பாடசாலைகள் பற்றிய சட்டமும் கொண்டுவரப்பட்டன.[2] அவை கட்டாயக்கல்வி வாய்ப்பினை வழங்கு வதற்கான அடிப்படைகளாக அமைந்தன. இவற்றின் காரணமாக 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கல்வித்துறைச் செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியிருந்தன. ஆங்கிலக்கல்வியையும் சுதேச மொழிக்கல்வியையும் வழங்கும் செயற்பாடுகள் துரிதமாக இடம்பெற்றிருந்தன.

அரசாங்கம் பாடசாலைகளை அமைத்து அதற்கான செலவினங்களைப் பெற்றுக் கொண்டு நேரடியாகப் பராமரித்தவிடத்து அவை அரசாங்கப் பாடசாலைகளாக அமைந்தன. தனியார்கள் தன்னார்வ அடிப்படையில் பாடசாலைகளை அமைத்து நடத்தும்போது அவை தனியார் பாடசாலை களாக அமைந்தன. மத நிறுவனங்கள் பாடசாலைகளை அமைத்து நடத்திய போது அவை மதசார்புப்பாடசாலைகள் ஆயின. கல்வித்துறைச் செயற்பாட்டில் இத்தகைய பல வகையான முயற்சிகளும் இடம் பெற்றிருந் தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய அரசாங்கம் கல்விக்கான செலவைக்குறைக்கும் வகையில் மத சார்புப் பாடசாலை களையே ஊக்கப்படுத்தியது. அவ்வேளையில் புரட்டஸ்தாந்த மதங்களுக்கு அத்தகைய வாய்ப்பு வழங்கப்பட்டது. அரசாங்கத்தின் உதவியும் வழங்கப் பட்டது. இதனால், சுதேசிகள் அதிருப்தியடைந்திருந்தமை காரணமாக 1860இன் பின்னர், கத்தோலிக்க, இந்து, பௌத்த மதத்தவர்களும் கல்வி யில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் உதவி வழங்கியது. பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்த உதவி வழங்கப் பட்டது. பாடசாலை ஒன்றினைத் தொடங்கியவர்கள், அப்பாடசாலையை அரசாங்கத்தின் விதிகளுக்கமையப் பதிவு செய்த பின்னரே இந்த உதவி வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் 1915 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகள் எதுவும் நிறுவப்பட்டிருக்கவில்லை. றோமன் – கத்தோலிக்க, அமெரிக்கன்,

[2] De Silva, K. M. (1973) *University of Ceylon History of Ceylon, Vol.III., Peradeniya* 465



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லியன், ஆங்கிலத் திருச்சபை ஆகியனவும், இந்து சமய அமைப்புகளும் கல்வி நடவடிக்கைகள் முழுவதையும் செய்தனர். அவர்களது கல்விச் செயற்பாடுகள் அரசாங்கத்தின் மேற்பார்வைக்கும், பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டு வந்தன. அக்காலத்தில், அரசாங்க உதவி பெற்றுக் கொண்டதும், பெற்றுக் கொள்ளாததுமான 417 பாடசாலைகள் இயங்கியிருந்தன. அவை பெரும்பாலும் மக்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் செறிவு குறைந்த பகுதிக ளான கரைச்சி, பூநகரி ஆகிய இடங்களில் போதுமான பாடசாலைகள் இருக்கவிலலை. யாழ்ப்பாணத்தில் இயங்கிய முதன்மைப்பாடசாலைகளை நடத்திய பல நிறுவனங்கள் தரமானவையாகவும், வினைத்திறன் மிக்கவையாகவுமிருந்தன.[3]

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கல்வியைப் பெறுவதற்காக மதம் மாறுவதையும் சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவ சமயச் சூழலில் கல்வி கற்கச் செல்வதையும் யாழ்ப்பாணத்தவர் விரும்பவில்லை. சமயத்தலைவர்கள் பலரும் சைவப் பாடசாலைகளை அமைத்து கல்வி வழங்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தனர். இத்தகைய நோக்குடன் ஆங்காங்கே தனியார் முயற்சியுடன் சைவப் பாடசாலைகள் உருவாகியிருந்தன. ஆனால் அனைத்து மக்களின் தேவையையும் நிறைவு செய்பவையாக அவை இருக்கவில்லை. இத்தகைய பின்னணியில் 1919ஆம் ஆண்டு சட்ட சபையிலே சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் அரசாங்கமே மக்களின் கல்விப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தன. இதுவரை கல்வி வழங்கிய கிறிஸ்தவ மத நிறுவனங்களின் எதிர்ப்புக் காரணமாக அரசாங்கம் அக்கொள்கையைப் பின்பற்றாது போனது. இதனால் இந்துக்கள் மத்தியிலும் பௌத்தர்கள் மத்தியிலும் தமது மதத்தைச் சார்ந்தவர்கள் கல்வி பற்றி தனிப்பட்ட வகையில் சிந்திக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. நாவலர் காலத்தில் இடம் பெற்ற சைவப் புத்துயிர்ப்பு முதலாவது புத்துயிர்ப்பாகவும் 1920களில் இடம் பெற்ற கல்வி நடவடிக்கைகளோடொட்டிய சைவப்புத்துயிர்ப்பு இரண்டாவது சைவப்புத்துயிர்ப்பு

[3] Ceylon Administrative Report (1930), Northern Province, Colombo: p. D 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் கொள்ளப்படுவதுண்டு. இத்தகைய கல்விக்கும், சமயத்துக்கும் இடையிலான தொடர்பை இரண்டாம் கட்டத்தில் ஆரம்பித்து வைத்தவர் களுள் காரைநகரைச் சேர்ந்த அருணாசலம் அவர்களின் உந்துதல், பின்னணியாக இருந்ததென்பதைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

1920ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கல்விச்சட்டம், இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கித்துவம் மிக்கதாகக் கொள்ளப்படுகிறது. நாட்டின் கல்வித்துறையில் அரசாங்கத்தினது பொறுப்பையும், கட்டுப்பாட்டினையும் வலியுறுத்தவதாக அமைந்தது.[4] இத்தகைய கல்வி பற்றிய அரசாங்கத்தின் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம், சைவ சமய ஆர்வலர்கள் மத்தியில், கல்விச் செயற்பாடுகளில் உத்வேகத்துடன் செயற்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உருவாக்கம்

1923ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் சைவவித்தியா விருத்திச் சங்கம் என்ற அமைப்பு வடஇலங்கையின் முன்னணி வகித்த அரசியல், சமூகத் தலைவர்களினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இச்சங்கத்தின் உருவாக்கத்தில் சேர் பொன் இராமநாதன், A.கதிரவேலு, M.S இராஜரட்ணம், S.இராஜரட்ணம், W.துரைசாமி, சு.நடேசபிள்ளை வி. வீரசிங்கம், சைவப்பெரியார் எஸ்.சிவபாதசுந்தரம் போன்ற பல தமிழ் சமூகத்தலைவர்கள் பங்கேற்றி ருந்தனர். சங்கத்தின் முதல் தலைவராக சேர் பொன். இராமநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். பின்னர் அவர் சங்கத்தின் காப்பாளராக இருக்க வைத்திலிங்கம் துரைச்சாமி தலைவரானார்.

ஜேன் ரசல் என்ற ஆங்கில ஆய்வாளர், சைவ பரிபாலன சபையையும், சைவவித்தியா விருத்திச் சங்கத்தையும் ஒன்றென்ற விளக்கத்தைக் கொண்டு எழுதியுள்ளார்.

அதனைப்போலவே வேறு ஆய்வாளர்களும் கூறியுள்ளனர். இரண்டும் வேறு வேறு அமைப்புகள் என்பதும் சைவ பரிபாலன சபை 1888ஆம் ஆண்டில்

[4] De Silva, K. M. (1973) p.465



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவானது என்பதும் குறிப்பிடவேண்டியது.[5] (1923தொடக்கம்1929 வரை இச்சங்கத்தின் நிர்வாகத்தில் பங்கு பற்றியவர்கள் பற்றிய விபரம் பின்னிணைப்பாக அமைக்கப்பட்டுள்ளது.)

1926ஆம் ஆண்டில், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினைச் சட்டபூர்வமானதாக ஆக்கும் முன்மொழிவு, சட்டசபையில், வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களால் முன் மொழியப்பட்டது. அங்கு மேற்கொள்ளப் பட்ட திருத்தத்தில் 'கல்வியை விருத்தி செய்வதற்கான இந்துச் சங்கம்' (Hindu board for furthering the education) என்பது 'கல்வியை மேம்படுத்து வதற்கான இந்துச் சங்கம்' ('Hindu board for the Promotion of education') எனத் திருத்தம் செய்யப்பட்டது. இச்சங்கத்தின் செயற் பாடுகள் 1926 ஆம் ஆண்டில் (Incorporated by Ordinance no.23 0f 1926) சட்ட அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது. எனினும் ஆங்கிலத்தில் 'இந்துக் கல்விச் சங்கம்' (Hindu Board of Education) என்பதும், தமிழில் இந்து என்பது சைவம் என அர்த்தப்படுத்தப்பட்டு, 'சைவ வித்தியாவிருத்திச் சங்கம்' என்பதும் வழமையாகப் பின்பற்றப்பட்டு அழைக்கப்பட்டது.[6] இதற்கான காரணம் எதுவாக அமைந்தது என்பதை விளக்க முடிய வில்லை.

---

[5] Russel, J. (1982). *Communal Politics under the Donoughmore constitution 1931-1947.* Colombo: Tisara Pirakakayo Ltd. see pages 13, 110-3 ….. The institution responsible for the creation of the *Hindu Organ* was the Saiva Paripalana Sabhai, the Society for the Propagation of Saivism. This society, which was normally known as the Hindu Boarsd of Education, was founded in 1888 in Jaffna. இந்தத் தகவலுக்கு ஜேன் ரசல், **Sumathipala,K.H.M**. *History of Education in Ceylon*, 1796-1965, Colombo1968. p.29-30 அவர்களின் நூலை மேற்கோள் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சுமதிபால் அவர்களின் நூலை அடிப்டையாக வைத்தே இந்தத் தவறுகள் இடம் பெறுவதைக் காண முடிகிறது. மேலும் இதே தவறு நீரா விக்கிரமசிங்க அவர்களின் பின்குறிப்பிடப்படும் நூலிலும் இடம் பெறுகிறது. **Wickramasinghe, Nira** (1981).*Ethnic Politics in colonial Sri Lanka 1927-1947*. New Delhi. p.129

[6] Hindu Organ 2nd Dec.1926



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் அமைப்பு முறை

சங்கம், அதன் அமைப்பு முறை பற்றிய நன்கு வரையறை செய்யப்பட்ட பகுதிகளைக் கொண்ட வலுவான யாப்பை உருவாக்கியிருந்தது. சங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபட நாட்டமுள்ள எவரும் தேர்வாளர், பணிப்பாளர் என்ற இரு வகையான அங்கத்துவ உரிமையினையும் ஆயுட்கால அல்லது வருடாந்த சந்தாப்பணம் செலுத்தி இணைந்து கொள்ளலாம்.

சங்கத்தின் இலட்சிய வாக்கியம் **'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'** என்பதாக அமைந்திருந்தது.

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நோக்கங்கள்

1. தேவையும் அவசியமும் உள்ள இடங்களில் சைவ வித்தியாசாலை களை அமைத்தல்,

2. செயற்பட்டுக்கொண்டு வரும் பாடசாலைகள் சங்கத்திடம் கையளிக் கப்பட்டால் அவற்றை ஏற்று நடத்துதல்,

3. தனியான முகாமையின் கீழ் இயங்கிவரும் பாடசாலைகளுக்கு தேவையான உதவிகளை வழங்குதல்,

4. சைவப் பிள்ளைகள் சைவ வித்தியாசாலைகளிலே கல்வி கற்க வேண்டுமென்ற கருத்தினைப் பரப்புதல்

5. தமிழ் இலக்கியம், சங்கீதம், நாடகம் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள்

மதத்தையும் கல்வியையும் இணைத்த வகையிலே இந்துக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட ஒரு பெரும் நிறுவனமாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் இயங்கியது. இச்சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டிலேயே மாதகலில் முதலாவது பாடசாலை நிறுவப் பெற்றது. இரண்டாம் ஆண்டில் பதியப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 பாடசாலைகளும் பதியப்படாத 14 பாடசாலைகளுமென 22 பாடசாலைகள் சங்கத்தின் பொறுப்பில் இருந்தன. மூன்றாம் ஆண்டில் 28 பாடசாலை சங்கத்தின் பொறுப்பில் வந்தன. நான்காம் ஆண்டில் 37 பாடசாலைகள் இயங்கின.[7]

| 1926 | 1927 | 1928 | 1929 | 1931 | 1932 | 1946 | |
|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலைகள் பதியப்பட்டவை | | | 41 | | | | 100 |
| பாடசாலைகள் மொத்தம் | 37 | 40 | 55 | 59 | 59 | 61 | 112 |
| மாணவர்கள் எண்ணிக்கை | 5243 | 6915 | 6925 | 7277 | 7833 | 8440 | 18500 |
| ஆசிரியர்கள் பயிற்றப்பட்டவர்கள் | 62 | 105 | 105 | 112 | 171 | 218 | |
| ஆசிரியர்கள் மொத்தம் | 174 | 256 | 256 | 265 | 282 | 320 | 575 |

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வளர்ச்சியைக் காட்டும் வகையில் மேல் வந்த அட்டவணை தயாரிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள் 1958இல் அதன் உச்ச நிலையினை எய்தியிருந்தது.[1] அதனைத் தொடர்ந்து, 1960இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்தமை காரணமாக பாடசாலைகளை நிர்வகிக்கும், இச்சங்கத்தின் செயற்பாடுகள் முடிவை எட்டியது.

இச்சங்கத்தின் செயற்பாடுகள் இலங்கையின், சைவப்பிள்ளைகள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் இடம் பெற்றமையும், புத்தளம், சிலாபம், நாவலப்பிட்டிய, திருகோணமலை, வாழைச்சேனை, நெடுந்தீவு என பிரயாணவசதி குறைவான பகுதிகளையும் இணைத்திருந்தமை முக்கிய மாகக் கவனிக்கத்தக்க விடயமாகும்.

1929ஆம் ஆண்டில் சைவ ஆசிரியர்களுக்கான கல்வியும் அனாதை ஆண்பிள்ளைகளுக்கான இல்லமும் அமைக்கப்பட்டது. 1939 ஆம் ஆண்டில் அனாதைப் பெண்பிள்ளைகளுக்கான இல்லமும் அமைக்கப்பட்டது. 1945 ஆம் ஆண்டளவில் இச்சங்கம் ஒரு பெரும் நிறுவனமாக வளர்ச்சி பெற்றது. 105 தமிழ்பாடசாலைகள் 04 தமிழ் ஆங்கிலப்பாடசாலை, 03 ஆங்கிலப்பாட

[7] Hindu Organ 16nd Dec.1926



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகள், 01 ஆசிரியர் கல்லூரி, 02 அநாதை இல்லம், 04 கைத்தொழில் விருத்தி இல்லம் ஆகியன இயங்கின. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சேவைகள் வட இலங்கையுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. தமிழ் மக்கள் வாழுகின்ற இலங்கையின் சகல பாகங்களிலும் அவை வசதிபெற்ற நகரங்களாக இருந்தாலும் சரி, வசதி குறைந்த கிராமப்புறமாக இருந் தாலும் சரி சைவத்தமிழ்க் கல்வியை வழங்குவதற்கான பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வப்போது ஏற்பட்ட பிரச்சினைகளைக்கருத்திற் கொண்டும் பாடசாலைகளும், கற்பதற்கான ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டன.

**1958 ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் நிர்வாகத்தில் இயங்கிய கல்வி நிறுவனங்கள் பற்றிய விபரங்கள்**

| | |
|---|---|
| சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை | 1 |
| ஆங்கிலப்பாடசாலைகள் | 7 |
| தமிழ்ப்பாடசாலைகள் | 147 |
| அனாதைப் பிள்ளைகள் விடுதிகள் | 2 |
| அனாதைப் பிள்ளைகள் மாணவர் எண்ணிக்கை | 300 |
| நெசவுப் பாடசாலைகள் | 15 |
| கூடை இழைக்கும் பள்ளிகள் | 16 |

1958ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் கீழ் இருந்த பாடசாலைகள் 154 ஆகும். ஏனயவை கல்விசார் நிறுவனங்கள் ஆகும் .

## சங்கம் பெற்றுக் கொண்ட நிதி உதவிகள்

சங்கம் தனது செயற்பாட்டிற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியைப் பெற்றுக் கொண்டதெனினும், மக்களால் வழங்கப்பட்ட பணஉதவி சங்கம் விரைவாக தனது சேவைகளை விஸ்தரித்துக் கொள்வதற்கும் சங்கம் இடைநிறுத்தப்படாது தொடர்ந்து இயங்கு வதற்கும் காரணமாக இருந்தது. சங்கத்தின் கல்விச் செயற்பாடுகளில்

[8] 1958ஆம் ஆண்டில் சங்கத்திடம் இருந்த பாடசாலைகள் விபரம் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாடு கொண்டவர்கள் நிலங்களையும், கட்டடங்களையும், பணத்தினையும், பொருட்களையும் வழங்கியிருந்தனர். திருநெல்வேலியில் சங்கத்தின் காரியாலயம், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் உருவாக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் அப்பகுதியில் வாழ்ந்த பரோபகாரிகளின் தாராள உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. இவை தவிர சங்கத்தினால் கிராமப்புறங்கள், வசதிகுறைந்த பகுதிகளில் அமைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அப்பிரதேசத்தவர்களும் பொது நலன்விரும்பிகளும் பல்வேறு வகையிலும் ஆதரவு வழங்கியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணத்தின் வருவாய் வளம் வழங்கிய மலேசிய உழைப்பாளர்களின் பண உதவியும் பெருமளவுக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது. மலாய - புங்குடுதீவுச் சங்கம், மலாய - சங்கானைச் சங்கம் ஆகிய அமைப்புகள் பாடசாலைகளின் பொருட்டு நிதிஉதவி வழங்கியிருந்தனர். அதுமட்டுமல்லாது இந்து தமிழ்க் கல்விப் பாரம்பரியம் நிறுவனமயப்பட்ட வகையிலே வளர்ந்து செல்வதற்கும் நிலைத்து நிற்பதற்கும் இச்சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் இணைந்து நிர்வாக நடவடிக்கைகளில் உழைத்த சேவையாளர்கள் பலரும் சிறந்த பங்களிப்பினை ஆற்றியிருந்தனர். வசதி குறைந்த சிறார்களின் கல்வியில் அதிக கவனம் செலுத்தியமை மற்றுமொரு முக்கியமான விடயமாகும். தாய் தந்தையர் இல்லாத ஆதரவற்ற பிள்ளைகளில் கவனம் செலுத்தியமை (அநாதை) ஒரு வகைத்தானது. அது மட்டுமன்றி, மிகவும் பின் தங்கிய கிராமப் புறங்களில் வாழ்ந்த மக்களுக்கும் கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதில் கவனம் செலுத்தியிருந்தனர். பல பரோபகாரிகள் அத்தகைய பகுதிகளில் பாடசாலைகள் நிறுவுவதில் பெருமளவு பங்கெடுத்துக் கொண்டனர். பல வைத்தியத்துறையாளர்கள் ஈடுபாடு காட்டியிருந்தனர். மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி. சின்னத்தம்பி அவர்கள் செயற்பாடு குறிப்பிடத் தக்கது.

### சமூக ஏற்றத்தாழ்வு பாராட்டாத கல்வியை வழங்கும் திட்டம்

யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிய சாதி அடிப்படையிலான சமத்துவமற்ற செயற்பாடுகள், கல்வித்துறையிலும் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது என்பது வெளிப்படையானது. இங்கு சமயமாற்றம் தானும் சாதிய எல்லையைத்தாண்டக் கூடிய நிவாரணியாக அமையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களிலும் சமத்துவ அடிப்படையில் கல்வி வழங்குவதில் எப்பொழுதும் இடர்பாடுகள் எதிர் கொள்ளப்பட்டிருந்தன. உதாரணமாக 1902ஆம் ஆண்டில், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்த பெண்பிள்ளை ஒருவரை, உடுவில் பெண்கள் விடுதிப்பாடசாலையில் இணைத்துக் கொண்ட போது, இந்து சமூகத்தவர்களும், சில கிறிஸ்தவ சமூகத்தவர்களும் எதிர்த்திருந்தனர். எனினும் கிறிஸ்தவ சமூகத்தவர் பலரின் நல்லெண்ணம் காரணமக சாதி வேறுபாடு கவனிக்கப்பட மாட்டாது என்ற தீர்மானத்திற்கு வரக்கூடியதாயிருந்தது. இதே போன்ற முடிவு தெல்லிப்பளையில் இயங்கிய ஆண்கள் ஆசிரியப்பயிற்சிக் கல்லூரியிலும் எதிர் கொள்ளப்பட்டிருந்தது.[9]

தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் கல்வி என்பது பல்வேறு பிரச்சினைகளுக்கும் உரியதாக இருந்தது. காலனித்துவ அரசுகளின் செயற்பாடுகளோ, மிஷனரிமார்களின் மதம் மாற்ற வழிமுறைகளோ தானும் பெரிதாக எதனையும் ஏற்படுத்த முடியவில்லை.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சூரன் என்பவரின் தனிப்பட்ட முயற்சியினால் 1917ஆம் ஆண்டில் வடமராட்சியில் தேவரையாளி பாடசாலை உருவாக்கப்பட்டது. ஆனால் எனைய இடங்களில் இத்தகைய முயற்சி அதே காலகட்டத்தில் ஏற்படவில்லை. சூரன் அத்தகைய சாதனையை ஏற்படுத்துவதற்கு அவருக்கு இருந்த வாய்ப்புகள் ஏனையவர்களுக்கு இருக்கவில்லை. அத்துடன் அவர் இதனைச் சாதிப்பதற்கு எதிர்கொண்ட சவால்கள் சாதாரணமானவையல்ல. சூரனின் குறிப்புகள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

> "யாழ்ப்பாணப் பெரு நிலப்பரப்பின் பொதுவான எழுத்தறிவுப் பாரம்பரியத்தின் பின்னணியில் வடமராட்சியின் அப்பாரம்பரியம் நோக்கப்படுகிறது. கல்விக்கூடங்களை நிறுவியவர்களின் வரிசையிலே வடமராட்சியின் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த திரு. கா.சூரன் அவர்களது பணி இங்கு தனித்துவத்தைப் பெற்றுள்ளது. 'சாதிமான்களுக்கும்'

[9] Chelliah, J.V. *A Century of American Mission* . Jaffna:66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ பிரசாரகர்களுக்கும் எதிராகத் தேவரையாளி சைவப்பாடசாலையை (பின்னர் தேவரையாளி இந்துக்கல்லூரி) நிறுவிய அன்னாரது பண்பும், பணியும் விரிவான ஆய்வுக்குரிய விடயப்பரப்புடையன."

(வாழ்த்துரை வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும், 1984) என்பது பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் கருத்தாகும்.[10]

தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் சமத்துவ உரிமைக்கான கிளர்ச்சிகள் நீண்ட காலமாக இடம் பெற்றதுடன் யாழ்ப்பாண சமூகத்தின் வெளிப்படுத்தப்படாத வரலாற்றின் அத்தியாயமாகவும் அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு உரிமைகளுக்காகச் சிறிய அளவிலான எதிர்ப்புக்களைக் காட்டிவந்திருந்தனர். அதனால் பெருமளவு உயிர்ச்சேதங்களும், சரீரச் சேதங்களும், உடைமைச் சேதங்களும் இடம் பெற்றிருந்தன.

1920களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் பற்றிய விடயத்தில் புதிய போக்கு இடம் பெறத் தொடங்கியது. கல்வி கற்ற உயர் குழாத்தினரில் ஒரு பகுதியினர், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் சமத்துவ உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினர். தனிப்பட்ட வகைகளில் இத்தாராள சிந்தனை கொண்டவர்கள் சமூகத்தை விமர்சிக்கத் தொடங்கியிருந்தனர். பாவலர் துரையப்பாபிள்ளை போன்றவர்கள் இலக்கியங்கள் வாயிலாக சாதிக் கொடுமைகளைச் சாடியிருந்தனர். இத்தகைய கருத்துக்கள் பத்திரிகைகள் வாயிலாகவும், சொற்பொழிவுகள் வாயிலாகவும், உணர்த்தப்பட்டன. 1922 ஜூலை, மாதத்தில் வெளிவந்த *இந்து சாதனம்* பத்திரிகையில், யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதி தொடர்பான அநீதிகள் பற்றிக் குறிப்பிட்டு, இந்திய தேசிய காங்கிரஸ் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பின்பற்றி, அதனைக் களைய வேண்டும் எனவும்

---

[10] வட அல்வை முருகேசனார் பவள விழா மலர் (1993) பவள விழா குழு. அல்வாய்..*பக்.13*

[11] Hindu Organ. 27 July 1922



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தியிருந்தது.[11] 1922 ஆகஸ்ட் 10இல் வெளிவந்த இந்து சாதனம் பத்திரிகையின் கருத்துரையொன்றில்,

> *"In the interest of Hindu religion, and the Hindu community also, the lower classes should be freed from the tyranny and oppression of those who wish to perpetuate exclusive previleges in the name of caste and many of the previleges from which they have been debarred by the custom of the country should be relaxed in their favour. How many hundreds if not thousands of Hindus of lower castes in Jaffna have lost during the last few years, entirely owing to the high-handed proceedings and oppression on the part of Vellalas."*

எனக் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அத்துடன் 'அண்மைக்காலத்தில் சில குறிப்பிட்ட சாதியினர் மத்தியில் இடம் பெற்று வரும் மதமாற்றம் சமய அடிப்படையிலன்றிச் சமூகப் பிரச்சினை காரணமாகவே இடம் பெறுகிறது' எனவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.[12]

1924ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் அமைப்பிலும், யாழ்ப்பாண தாழ்த்தப்பட்டோர் சமூக சேவைச் சங்கம் என்ற அமைப்பிலும் அங்கம் வகித்தவர்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட வகையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் விடயங்களில் முழுமையான ஈடுபாட்டுடன் கருமமாற்றத் தொடங்கினர். 1923ஆம் ஆண்டு டிசம்பர் 29இல், யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று கூட்டப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் நெவின்ஸ் செல்வத்துரை, ஜே.வி. செல்லையா, றோமன் – கத்தோலிக்க, புரட்டஸ்தாந்த குருமார்கள் கலந்திருந்தனர். அக்கூட்டத்தில் இணைந்தவர்கள் தம்மை யாழ்ப்பாண சமூக சேவைச் சங்கம் (Jaffna Social Service League) எனக் குறிப்பிட்டப்பட்டுள்ளனர். இது குறித்து இந்து சாதன பத்திரிகையில் கருத்துத் தெரிவித்த சபாரத்தினசிங்கி என்ற யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் 'யாழ்ப்பாண சமூக சேவைச் சங்கம், தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் விடயத்தில்

[12] Hindu Organ. 10 Aug.1922



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டவட்டமாக சிலதைச் செய்யவுள்ளதை அறிவதற்கு நன்றாக உள்ளது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

1924இல் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் காங்கிரஸ், தமது முதலாவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது தீர்மானத்தில் "தற்போது நாட்டில் நிலவி வரும் சாதி வேறுபாடுகள், நாட்டின் முன்னேற்றத்திற்கே ஒரு தடையென இக் காங்கிரஸ் கருதுகிறது. எமது மத்தியில் இருந்து தீண்டாமையெனும் சாபக்கேட்டை அகற்றுவதற்கு இயன்ற வரை காங்கிரஸ் உறுப்பினர்கள் பாடுபட்டு உழைத்தல் வேண்டும்." ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இத்தகைய ஒரு சூழலில் 1923இல் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கம், தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் கல்வி குறித்தும் கவனமெடுக்கத் தொடங்கியிருந்தது. சங்கம் ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளைகளுக்கான தனியான பாடசாலைகளை ஆரம்பித்தது. 1926ஆம் ஆண்டில் சிவியாதெருவில் ஒரு பாடசாலை அமைக்கப்பட்டது. இதற்கு ஆரம்பத்தில் 'நந்தனார் பாடசாலை' எனப்பெயரிட்டிருந்தனர். ஆனால் அப்பிரதேச மக்கள் அந்தப் பெயரை விரும்பாத காரணத்தினால் அதன் பெயர் 'ஆனந்த வித்தியாசாலை' எனப் பெயர்மாற்றம் செய்ததும் குறிப்பிடத்தக்கது. இதே போன்று சன்மார்க்க வித்தியாசாலையும் தாழ்த்தப்பட்ட சமூக

13 **Depressed classes:** Hindu Board of education has already made provision for education of the depressed classes. The school of Chiviatheru is doing very well. Fortunately, the board need not be worried about funds, for money will be forthcoming not from the well to- do, but even from the poorest poor, for all know it is a deserving case. Who will not care to help such worthy cause? It only remains for the board to set the necessary machinery working. *Hindu Organ*.2nd Dec.1926

14 Mahatmaji by laying the foundation stones for the two schools for the depressed classes, one at Chunnakam ( Dravida Vidyasalai) and the other at Moolai has sanctioned the noble efforts which the Hindu Board of Education is making for the uplift of of this unfortunate class of people. Education is the surest method of wiping off Untouchability .

It is the duty of the Hindu Public of Jaffna in the F.M.S. to Co-operate with the Hindu Board in bringing about the social emancipation of the Depressed Classes. *Hindu Organ* 1st Dec. 1927



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்காக சங்கத்தினால் நிறுவப்பட்டது.[13] சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் நிறுவப்பட்ட பாடசாலைகளுக்குப் பெரும்பாலும் சைவ நாயன்மமார்களின் பெயர்களே சூட்டப்பட்டன. சிலபோது நிறுவியவர்களின் டெயர்கள் சூட்டப்படடன.[14]

இச்சபையின் செயற்பாடுகளில், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் கல்வி வழங்குவதென்பது கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனியான பாடசாலைகள் அமைக்கப்பட்டன. சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆரம்பத்திலிருந்தே தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் கல்வி பற்றியும் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தது. அவர்களுக்கு கல்வி வழங்கப்படுவதற்கான வழிகள் செய்யப்படட வேண்டும் என்ற தீர்மானம் 1925ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இத்தீர்மானத்தை ஆ.கதிரவேலு என்பவர் முன்மொழிய சேர். போன்.இராமநாதன் வழிமொழிந்திருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அத்தீர்மானத்தில் சாராம்சமாகப் பின் வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

1) தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த ஒருவர், தாமாகவே துரதிட்டவசமாக தமது பிறப்பு நிலை காரணமாக உயர் வகுப்பினர் பெறக்கூடிய வாய்ப்பு களை பெறமுடியா திருப்பதால், ஒவ்வொரு இந்து சமயத்தவரும் அவர்கள் அந்த வாய்ப்பைப் பெறு வதற்கு உதவ வேண்டியது கடமையாகும்.

2) இத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு முதற் படியாக தேவை உள்ள இடங்களில் ஆண், பெண் பிள்ளைகளுக்கான பாடசாலைகளை அமைத்தல் வேண்டும்.

3) இந்து முகாமைக்காரர்களால் நடத்தப்பட்டு வருகிற அரச உதவிப்பணம் பெறும் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களை இணைத்துக் கொள்வதை ஊக்கு விப்பதுடன் சைவவித்தியா விருத்திச் சங்கம் அவர்களுக்கு ஆதரவும் வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) எட்டாம் தரம் வரை கல்வியை நிறைவு செய்த மாணவர் களை இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் பாரபட்சமின்றி இணைத்துக் கொள்ள வேண்டும். [15]

மேற்படி தீர்மானம் பத்திரிகைகளில் வெளிவந்த போது, அதனைப்பற்றி பத்திரிகையில் கருத்து வெளியிட்ட ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நான்காம் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளமுடியவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ...ஆரம்பக் கல்வி மட்டும் ஒரு தனிமனிதனை சமத்துவமாகவும் தூய்மையாகவும் ஆக்கிவிடுமா? விரைவில் அத்தகைய ஒரு நிலை வருவதற்கான சாத்தியங்களும் இல்லை. ஆயினும், அவ்வாறு ஏற்பட்டால் முதலில் பெருமைக்குரிய சைவரான சேர். போன். இராமநாதனுக்குரியதும், அவரால் நிர்வகிக்கப்படுவதும்,

[15] Then the motion on the Depressed classes was considered and Mr.A.Cathiravelu moved and the Hon. Ramanathan seconded ,the following resolution, which was carried unanimously;-

1) According our religion the process of uplifting the depressed classes must be through bodily and mental cleanliness and that as the ideas and practices of a person who has had the misfortune of being born in what is called low –caste family do not help him to raise himself in the social scale, it is the duty of every Hindu to him in attaining the privileges enjoyable by what is called High caste person

2) That towards this uplift the first step is to establish schools for the boys and girls of depressed classes where there are necessary.

3) That the practices among the Hindu managers of schools admitting such boys and girls to their Grand in aid schools should be encouraged and that the Hindu board of education should give support to it.

4) That when boys and girls have raised themselves to the VIII th standard , they should be fully admitted to the secondary schools on terms of equality.( Hindu Organ 5th Mar. 1925) ( Ceylon Patriot 11th Mar1925)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைமைப் பீடமாகவும் உள்ள பரமேஸ்வராக் கல்லூரியில் அது நடைபெறுகிறதா என்பதைக் காணவேண்டும்.[16]

1926ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி பரமேஸ்வராக்கல்லூரியில் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் பாடசாலைகளைச் சேர்ந்த முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கான மகாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மகாநாட்டிற்கு சேர்.பொன். இராமநாதன் தலைமை தாங்கித் தலைமையுரை நிகழ்த்தியிருந்தார். அவர் அவ்வேளையில், "எமது தாழ்த்தப்பட்ட சமூக சகோதரர்களை சமூகத்தின் தாழ்ந்த நிலையில் வைத்திருப்பது எமது நாகரிகத்திற்கும் மனிதத்துவத்திற்கும் கறையாக அமையும் எனவும், கல்வியால்மட்டும் சமூகத்தில் மேம்பாட்டை அடையமுடியுமாதலால் மனப்பூர்வமாக உங்களது பாடசாலைக் கதவுகளைத் திறந்து இயலுமான யாவற்றையும் செய்யுங்கள் எனவும் குறிப்பிட்டிருந்தார்.[17]

---

[16] We must confess we cannot understand the meaning of resolution **No. 4** passed at the last meeting of the Hindu board of education to the effect that all boys and girls of the depressed classes who have raised themselves to the V111 th standard ,should be fully admitted to the secondary schools *on the basis of equality*. We like to know whether the board considers that a mere source of elementary education would transform an individual and prove as a purification ordeal or weather it takes literary equality. It is as yet too early to pronounce an opinion because we do not see the possibility of such a contingency arising in the near future , but if it is ever does we like to see it first at the head-quarters of the board , namely Parameshwara College owned and managed by that eminent Saivite Sir. Ponnampalam Ramanathan . *Hindu Organ 5th March 1925*

[17] "In this connection I have to put in a word in behalf of our unfortunate brethren of the depressed classes. To place them any longer in their present low social condition is surely nothing less than a blot on our civilization, nay on our humanity. Education is the only lever by which we may hope to rase them in the social scale and I am sure you will cheerfully do everything in your power to throw open your schools to the children of these so-called low castes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா காந்தியிடமும் சமய அடிப்படையிலான கல்வி வழங்குவதன் அவசியம் பற்றியும், கிறிஸ்தவ மிஷனரிமார்களின் மதமாற்ற நடவடிக்கைகள் பற்றியும் முறையிடப்பட்டிருந்தது. அதற்கு பதில் வழங்கும் வகையில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பின்பற்றக்கூடிய வழிமுறை பற்றி காந்தி கருத்தினை வெளியிட்டிருந்தார்.

"இந்துக்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வி எத்தன்மையதாகும் என்பதை நீங்களே முடிவு செய்யும்உரிமையுடையீர். அதற்காகச் சைவ வித்தியா விருத்திச் சங்கமொன்றையும்வைத்திருக்கின்றீர்கள் என்பது எனக்குச் சந்தோஸம். அச்சங்கத்தை நன்னோக்கத்துடன் விருத்தியடையச் செய்வீர் என்பது எனது விருப்பம். அப்படிச் செய்யுங்கால், மற்றைய கிறிஸ்தவ வித்தியாசாலைகளுடன் முரணடைந்து சண்டை செய்ய வேண்டியதில்லை. உங்கள் வித்தியாசாலைகளில் தக்க உபகரணங்களை நிறுவி, சிறந்த தகுதி வாய்ந்த ஆசிரியர்களையும் நியமிப்பின், எவ்வித தடையுமின்றித் தாமாகவே சைவ மாணவர்கள் கல்வி கற்க அங்கு வருவார்கள்."[18]

1927ஆம் ஆண்டில், மகாத்மா காந்தியின் வருகையுடன், டொனமூர் அரசியற் சீர்திருத்தக்குழுவினரின் வருகையும் இடம் பெற்றிருந்தது. யாழ்ப்பாணத்தின் உயர் குழாத்தினரில் பெரும்பாலானவர்கள் சட்டசபையில் சிங்கள – தமிழ் ஆசனங்களைப் பெறுவது பற்றிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தமது தாழ்நிலை பற்றிய மனுக்களைச் சமர்ப்பித்தருந்தனர். சீர்திருத்தக்குழுவினர் அவர்களது கோரிக்கைகள் மீது அனுதாபம் கொண்டிருந்தனர். சர்வஜன

[18] Gandhiji's Message to the Hindus

"You (Hindus) have a right to control the education of your own children, and I am glad that You have got your own Board of Education. I would like you to strengthen that board in the right spirit as much as you can, but, that should mean no jar whatsoever with the rival institutions of the Christian Missionaries. If you have got an abily manned staff of educationists and provide the necessary facilities for the Hindu children, naturally all the hindu children will come to your institutions."

Extract from the message delivered to the Hindus of Jaffna on 27.11.1927



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குரிமை வழங்கப்படுவதை நியாயப்படுத்திய காரணிகளில் ஒன்றாக அதுவும் அமைந்திருந்தது. இப்பொழுது மனித சமத்துவம் என்ற விடயம் மெதுவாக அரும்பத் தொடங்கியது. அதன் அடிப்படையில் கல்வி விடயத்தில் மாணவர்கள் எதிர் கொண்ட அசமத்துவ அம்சங்களும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பாடசாலைகளில் சமாசனம் போன்று, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சமபோசனம் என்ற விடயம் கவனிக்கப்பட்டது. இந்த அம்சங்கள் அரசாங்கத்தின் கவத்திற்குக் கொண்டு வரப்பட்டது.[19]

## சமாசனம் (Equal seating)

1929 – 1930 காலப்பகுதியில் யாழ்ப்பாணசமூகத்தில் இடம் பெற்ற மிகவும் முக்கியமான பிரச்சினை பாடசாலைகளில் சமாசனம் வழங்குதல் பற்றியதாகும். சமாசனம் என்பது பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் இருக்கை வசதியில் வேறுபாடில்லாதிருத்தல் ஆகும். 1929ஆம் ஆண்டில்,மாணவர் காங்கிரஸ் அமைப்பினரும், தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முன்னேற்றத்திற்காகச் செயற்பட்டவர்களும், சமூக அசமத்துவங்கள் நிலவிய சூழலில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி வழங்குதல், சமாசனம் வழங்குதல், சமபோசனம் முறையை ஏற்படுத்துதல் என்பவற்றை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டனர். அவர்கள் தாழ்த்தப் பட்ட சமூகத்தவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலும், மாணவர்கள் மீது காட்டப்படும் பாரபட்சங்களைக் களையும் வகையிலும், அரசாங்கத்தின் கவனத்திற்கு அறியப்படுத்தியிருந்தனர். ஏனெனில் அதிகமான பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட சமூகப்பிள்ளைகளுக்கு பாரபட்சத்தை வெளிப்படுத்தும் வகையில் உயரம் குறைவான ஆசனங்கள் வழங்கப்பட்டன அல்லது தரையில் அமருமாறும் செய்யப்பட்டிருந்தனர். அரசாங்கம் அது தொடர்பான கட்டளை ஒன்றினை வெளியிட்டது.

[19] Youth leaders like Nevins. Selvadurai, Dr. Paul Hensman and J. Hensman commenced organizing the low caste people with the help of the Jaffna Youth Congress and the first such organization was the Depressed Tamils Service League which held its inaugural meeting on the Thai Pongal Day, January 14, 1930. It demanded special representation in the State Council for the depressed classes in the Jaffna.(Ilankai Thamil Sangam)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி, அரசாங்க பாடசாலைகளிலும், அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளிலும், அனைத்து மாணவர்களுக்கும் 'சமாசனம்', 'சமபோசனம்' வழங்குதல் என்ற ஒழுங்கைப் பேணவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

1929ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் 503 பாடசாலைகள் இருந்தன. 10 கல்லூரிகளும், 55 ஆங்கிலப்பாடசாலைகளும், 12 ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிபாடசாலைகளும், 426 சுதேச மொழிப்பாடசாலைகளும் இருந்தன. இப் பாடசாலைகள் யாவற்றிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அனுமதி வழங்கப்பட்ட பாடசாலைகளிலும் சமனான அந்தஸ்து வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தவர்கள் மத்தியில் மேற்படி தீர்மானத்திற்கெதிராக வலுவான எதிர்ப்புணர்வு வெளிப்பட்டபோதிலும், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் கீழுள்ள அறுபது பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் இந்த விதியைக் கடைப்பிடிக்குமாறு சங்கம் அறிவித்தல் விடுத்தது.

1930ஆம் ஆண்டு பெப்ருவரி 28ஆம் திகதி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆறாவது வருடாந்தக்கூட்டம், சைவப்பெரியார் எஸ்.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அங்கு சமாசன விடயம் பற்றியும் கருத்துரைக்கப்பட்டது. திரு.சோமசுந்தரம் என்பவர், சமாசனம் பற்றிய சுற்றறிக்கை சைவசமயத்தின் நன்மை குறித்துக் கவனிக்கவில்லை எனவும், சைவசமயத்தைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை எனவும் கேள்விபெழுப்பியிருந்தார். தலைவர் அது அரசாங்கத்தின் சட்டமாக இருப்பதால் அவை எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார். அதன்பின் அந்தச் சுற்றறிக்கையை ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இச்சுற்றறிக்கை அமுலுக்கு வந்து சில மாதங்களின் பின்னர், இது தொடர்பான கூட்டமொன்று நடத்தப்பட்டமைபற்றிய விபரம் கதிர்காமர் அவர்களின் நூலில் தரப்பட்டுள்ளது. '1930ஆம் ஆண்டில் சமாசனம் குறித்த ஒரு கூட்டம் சேர்.பொன். இராமநாதன் தலைமையில் கூடி "தாழ்த்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்து மாணவர்களுக்கு பாரபட்சமான இருக்கைகளை வழங்கியதன் காரணமாக எந்தவொரு பாடசாலையும் அரசாங்க உதவிபெறாது போகும் சந்தர்ப்பம் ஏற்படக்கூடாது. அத்துடன் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஆசனங்களில் அவர்கள் இருக்க மறுத்தால், அதற்காக பாடசாலை முகாமையாளர்களுக்கு உதவிப்பணம் வழங்காது அல்லது வேறு விதத்தில் தண்டனை வழங்கக் கூடாது." எனவும், "சமாசனத்தை அமுல்படுத்துவதாயின், அதன்போது பாடசாலைக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்களுக்கு அரசாங்கம் பொறுப்பு எடுப்பதாக உத்தரவாதமளிக்க வேண்டும்" எனவும் தீர்மானம் எடுத்திருந்தது. மேற்படி செய்திக்குறிப்பு '*டெய்லி நியூஸ்*' (*The Ceylon Daily News*-26thMay 1930) என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தமை சாந்தசீலன் கதிர்காமர் அவர்களின் நூலில் மேற்கொள் காட்டி எழுதப்பட்டுள்ளது. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தீர்மானம் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய எதிர்ப்பு இத்தகைய கூட்டம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கலாம்.[20] சங்கம் 'சமாசனம்' ஒழுங்கைப் பின்பற்றியதைத் தொடர்ந்து, அதனை நடைமுறைப்படுத்தியமை காரணமாக, சங்கத்தின் கீழ் இயங்கிய ஏழு பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன. அரசாங்க விதியை ஏற்றுக்கொண்ட சமயத்திலும், மறுத்துக்கொண்ட சமயத்திலும் கூட பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன.[21]

---

[20] The Hindu Board resolution as follows: "that the manager's liability under the code regulation that no differentiated treatment was received by any pupil in aided schools ceased on accommodation being found in the shape of seats for children of depressed classes and that no manager should be penalized by loss of grant or otherwise should the children of the depressed classes decline to occupy the seats provided for them." Together with an amendment this resolution unanimously passed. The amendment read: "unless the Government guranteedto make good the damage that may be caused to school property by incendiarism or by other means the Hindu board should not enforce equal seating." *Handy Perinpanayagam Memorial Volume* (1980) பக்.67)

[21] 1958 ஆம் ஆண்டு அறிக்கை சைவ வித்தியா விருத்திச்சங்கம்: 1958



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாசனப்பிரச்சினை காரணமாக யாழ்ப்பாணத்தில், அரசாங்கப்பாட சாலைகளும் உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளும் உள்ளடங் கலாகப் பதினைந்து பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன என அரசாங்க நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்தக்காலத்தில் பல பாடசாலைகள் ஓலையால் வேயப்பட்டிருந்தமை குறிப்பிடக்கூடியது. அத்துடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வராத தனிப்பட்ட முகாமை யாளர்களின் கீழும் சைவப் பாடசாலைகள் அரசாங்க உதவியையும் பெற்று இயங்கியிருந்தன. துன்னாலையில் பாடசாலைகள் எரிக்கப்பட்டமை காரணமாக அங்கு பொலீஸ் காவல் நிலையம் ஒன்றை அரசாங்கம் நிறுவியது.[22] துன்னர்லை, உரும்பிராய் ஆகிய இடங்களில் சமாசன எதிர்ப்புக் காரணமாக இடம்பெற்ற குழப்பங்களை அடக்கும்வகையில், துன்னாலை யில் இரண்டு வாரங்களும், உரும்பிராயில் மூன்று வாரங்களும் பொலீசார் நிறுத்தி வைக்கப்பட்டனர். இதன் பின்னர், சட்ட ஒழுங்கிற்கு உட்பட்ட வகையில், அவர்கள் செயற்படத் தொடங்கினர். அதன்படி சமாசனம் விரும்பாதவர்கள் தனியார் பாடசாலைகளை அமைத்தனர். அவை அரசாங்க உதவி பெறாவிட்டாலும், அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. மூன்றுமாதங்கள் ஒழுங்காக நடைபெற்ற பாடசாலைக ளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்த ஆண்டில், இத்தகைய பாட சாலைகள் 12 புதிதாக அமைக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொண்டன.[23] சமாசன ஒழுங்கு அமுல் படுத்தப்பட்ட போது, கிராமப்புறங்களில் இயங்கிய மிஷன் பாடசாலைகளுக்குப் பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்பாது விட்டனர் எனவும், அதனால் பிள்ளைகள் வரவின்மையால் பாடசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது எனவும், மிஷனரிமார்கள் அறிக்கை யிட்டிருந்தனர்.[24]

[22] *ஈழகேசரி.* 22.06.1930

[23] Ceylon Administrative Report (1930), Northern Province, p. D 3 Colombo: Govt. Press

[24] Insistence on equal-seating accommodation for children of all castes at Government and Grant- in -Aid Schools resulted in a strong outbursts of caste-feeing. Fifteen schools were set on fire, and incendiarism was only checked by the stationing of punitive police at Tunnalaai and UrumpraiNo further outbreaks occurred, and the policewithdrawn after only two weeks at Tunnalai, and three weeks at Urumpirai. ... Objection to equal seating thnse forward took the legitimate method of attempting to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமபோசனம் என்ற ஒன்றாக இருந்து உணவருந்துதல் தொடர்பான விடயமாக வெள்ளாள சாதியைச்சேர்ந்தவர்கள் தீட்டாகக்கருதியிருந்தனர் எனவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சமபோசனம் விதியை அமுல்படுத்துவது குறித்து மூன்று அரசியற்தலைவர்கள் ஆள்பதியைக் கலந்துரையாடினர் எனவும், அதற்குத் தலைமைப்பொறுப்பை சேர்.பொன். இராமநாதன் வகித்திருந்தார் எனவும் உதய தாரகை (Morning Star) பத்திரிகையை மேற்கோள் காட்டி ஜேன் ரசல் குறிப்பிட்டுள்ளார்.[25]

> In December 1929 the Kopay Training College stopped providing separate tables for low caste trainees during meals and asked them to sit with the high caste trainees. This created a stir in the Jaffna peninsula and some high caste trainees kept away from lectures. Ramanathan leading a delegation of three people called on the Governor in the first week of January 1930 and urged him to order Kopay Training College to discontinue inter-dining.

இத்தகைய பின்னணியில், சமாசனத்தினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைப் பற்றி ஆராய்வதற்காகன மேலுமொரு கூட்ட மொன்று 14.06.1930 இல் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியா சாலையில் கூட்டப்பட்டது. அந்தப் பகிரங்கக் கூட்டத்தில் சட்டசபை உறுப்பினரா யிருந்த வை.துரைசுவாமி, எச்.ஏ.பீ சந்திரசேகரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். சு.இராசரத்தினம் அவர்கள் கலந்து கொள்வதற்கு மறுத்திருந்தார். வேறு பல அரசியற்றலைவர்கள் கலந்து கொள்ளாமை யைக்குறித்து தந்திகளும், கடிதங்களும் அனுப்பியிருந்தனர். அக்கூட்டத் தில், அரசாங்கம் பெரும்பான்மையினரின் சம்மதமின்றிப் பள்ளிக்கூடங்களில் சமாசனம் வழங்குவது பிழையானதெனக் குறிப்பிட்டு உரையாற்றிய

establish unaided schools. When such were established three months grace was givento enable them to qualify for recognition.Twelive have soqualified. Russel, J. (1982). p.11

[25] Russel, J. (1982). p.11

[26] *ஈழகேசரி*. 22.06.1930



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தனர். இறுதியாக சமாசனம் வேண்டாமென்ற தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.[26]

இதன் பின்னர், சமாசன விடயமாக வை.துரைசுவாமி அவர்களும் மேலும் ஆறு சைவப் பெரியார்களும் கச்சேரியில் உள்ள வித்தியாகர்த்தரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். வித்தியாகர்த்தர், சமாசனம் குறித்த அரசின் பிரமாணம் மாற்றப்படமுடியாது எனவும், பொது சனங்களின் விருப்பத்திற்கு மாறாகச் சமாசனம் கொடுப்பதற்குத் தாம் நெருக்க வில்லை எனவும், அவர்கள் விரும்பினால் தனியான பாடசாலைகளை அமைக்கலாம் எனவும், அத்தகைய பாடசாலைகளுக்கு அரசாங்க உதவிப்பணம் வழங்கப்பட மாட்டாது எனவும் முடிவாகக் கூறினார்.[27] 1930 ஜூன் மாதத்தில் ஊரெழு, வசாவிளான், புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வெள்ளாளர்கள் வித்தியாகர்த்தருக்கு எழுதிய மனுவொன்றில் சமாசன முறையை நீக்கிவிடுமாறு கேட்டிருந்தனர்.[28] இதனுடன் திருப்திப்படாத மக்கள் தலைவர்கள் லண்டன் இராசபிரதிநிதிக்கு விண்ணப்பம் அனுப்பி விசாரணைக்குழுவொன்றினை அனுப்பி வைக்குமாறும் கேட்டிருந்தனர்.[29] யாழ்ப்பாணக்கிராமங்களின் தலைவர்கள் சங்கத்தினால் அனுப்பப்பட்ட மனுஒன்றைப் பற்றிய தகவல் உள்ளது. அந்த மனுவானது, புத்தூரைச் சேர்ந்த எஸ்.சேதுபதி என்பவரைத்தலைவராகக் கொண்டு, மேலும் நான்கு பேர்களால் கையொப்பமிடப்பட்டு, பிரித்தானிய காலனிகளின் காரியதரிசிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 1930 ஜூன் 20ஆம் திகதியிடப்பட்ட அந்த மனுவில், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரோ,

---

[27] *ஈழகேசரி.* 02.07.1930

[28] T. Sabaratnam (2011) http://sangam.org/2011/02/ il_Struggle_21.php?uid=4232
June 1930 *vellalars* from Urelu, Vasavilan and Punnalaikadduwan sent a petition to the Education Department demanding it rescind the equal-seating directive. Most of the rural schools were closed down because *vellala* children kept away. ( Ilankai Tamil Sangam)

[29] *ஈழகேசரி.* 09.07.1930



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையோ சமாசனக் கோரிக்கையை முன்வைக்கவில்லை எனவும், சமாசனச் சட்டம் காரணமாக நாட்டின் சமூகச் சமநிலை பாதிக்கப் பட்டுள்ளது எனவும், சமாசனச் சட்டத்தை மீளப்பெறும்படியும் சாராம் சமாகக் குறிப்பிட்டிருந்தனர்.[30]

தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் சார்பாகவும் ஒரு மனு அனுப்பி வைக்கப் பட்டது. அந்த மனு தாழ்த்தப்பட்ட சமூகத்தின் சேவைக்கான சங்கத் தினால் 1930 ஆகஸ்ட் 20இல் திகதியிடப்பட்டு எழுதப்பட்டிருந்தது. அதில், தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் வாழ்வு பற்றி விபரித்து, அந்த விடயம் தொடர்பாகவும், மாணவர்களின் நிலை தொடர்பாகவும், டொனமூர் குழுவினருக்கு வழங்கப்பட்ட மனுவையும் நினைவு படுத்தியிருந்தனர். டொனமூர் குழுவினர், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குச் சமாசனம் வழங்கும்படி சிபார்சு செய்திருந்ததையும் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்த மனு தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் சேவைக்கான சங்கத்தின் சார்பில்

[30] T. Sabaratnam (2011) The change had not been asked by any community or school, though advocated by individuals of rationalistic and communistic tendencies. The change has been considered cyclonic and communistic one intended to disturb the equilibrium of our customs of the country and the caste system, which survived for several ages in spite of the political vicissitudes of the country at frequent intervals. The people of Jaffna are enraged by the action of the government

[31] T. Sabaratnam (2011) In the memorial, representatives of the depressed people stated in detail the hardships they suffered because of the treatment they received under the Hindu Social System. The memorial specifically pointed out "the differential treatment meted out to the children of the depressed classes in government and assisted schools." It said, Owing to the strong caste feeling, children of the depressed classes have now to suffer untold hardships. Some schools have refused to give equal seating on the ground that such a thing is opposed to the immoral customs of the Tamils. In other schools where equal seating is enforced, the high class children have been withdrawn; and in others low caste children have been compelled to leave school by the pressure brought to bear upon their parents who are, in all things but the name, slaves of the high caste people.The Donoughmore Commission which went into this matter recommended, that "equal and adequate facilities should be afforded in schools to the children attending them without distinction of caste, creed or race.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு நெவின்ஸ் செல்வத்துரை அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.[31]

அரசாங்கம் இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென ஒரு குழுவினை நியமித்தது. அரசாங்கப் பாடசாலைகளிலும், அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளிலும், தாழ்த்தப்பட்ட சமூகப்பிள்ளைகளுக்குச் சமமான இருக்கைகள் வழங்கப்படவேண்டும் என்ற விதி கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்கும், சமத்துவ அந்தஸ்திற்குமான போராட்டங்களின் வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் மிக்க கட்டத்தினை இது குறித்து நின்றது. இது தனியொரு விடயமாக அணுகப்பட வேண்டியதாக உள்ளது. அவர்களின் கல்வியில், சைவ வித்தியாவிருத்திச் சங்கம் படிப்படியாகவும், மிதமான முறையிலுமே இதனைக் கையாண்டிருந்தது. கல்வி வாய்ப்பை வழங்கும் வகையில், தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களுக்கான, பல தனியான பாடசாலைகள் அமைக்கப்பட்டன. பல பாடசாலைகளில் கல்வி அனுமதி பெறமுடிந்தது. நிச்சாமம் கணேச வித்தியாசாலை, வீரபிட்டி (வேரப்பிட்டி,காரைநகர்)ஸ்ரீகணேச வித்தியாசாலை, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை,(1954) புத்தகலட்டி, புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாசாலை, ஆகியவை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான தனியான பாடசாலைகளாக அமைக்கப்பட்டன. அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை வதிரியில் சூரனின் பிரதான சீடர்களான பண்டிதர் செல்லையா, திரு.க.முருகேசு ஆகியோராலும், அப்பிரதேச மக்களாலும் உருவாக்கப்பட்டுப் பின்னர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அப்பாடசாலைகள் எந்தெந்த ஆண்டில் உருவாக்கப்பட்டன எனச் சரியாகத் தெரியவில்லை.

இவ்வாறிருந்தபோதிலும், சங்கத்தின் சில பாடசாலைகளில் கல்வி அனுமதிக்கு தாழ்த்தப்பட்டவர்கள் அனுமதி கோராமல் இருந்த நிலையும் தொடர்ந்து இருந்தது. 1958ஆம் ஆண்டு அறிக்கையில், மூன்று பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனுமதிகோரவில்லை எனவும் எவ்வாறாயினும் அந்தப்பாடசாலைகளிலும் அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 1958 ஆம் ஆண்டின் அறிக்கை எழுதப்பட்ட வேளையிலும், சில பாடசாலகளில் தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்கள் இணைக்கப்படாத நிலை இருந்தமையும் அறியப்படுத்தப்பட்டுள்ளமை காணலாம். (1958 ஆம் ஆண்டு அறிக்கை சைவ வித்தியா விருத்திச்சங்கம்)

## பால்நிலை அடிப்படையிலான சமத்துவம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளில் பால்நிலை அடிப்படையில் பாடசாலைகள் பிரிக்கப்பட்டு அமைக்காமை முக்கியமான தொரு அம்சமாகக் கொள்ளமுடியும். மிஷனரிமார்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகள், ஆண்களுக்கெனவும், பெண்களுக்கெனவும் தனித்தனி யான பாடசாலைகளாக அமைத்திருந்தன. சில பாடசாலைகள் இதற்கு விதி விலக்காயிருந்தன. அதே போன்று சேர்.பொன். இராமநாதனால் அமைக்கப்பட்ட பாடசாலைகளும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியான பாடசாலைகளாகவே அமைந்திருந்தன. ஆனால் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட பாடசாலைகள் கலவன் பாடசாலைகளாகவே அமைந்திருந்தன. பெண்களுக்கான கல்வி பற்றிய சர்ச்சைகள் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில, மிகவும் வெற்றிகரமான முறையில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் பின்பற்றிய பெண்கள் கல்வி பற்றிய கொள்கை சிறப்புக்குரியதாகும்.

## சைவ ஆசிரிய பயிற்சிக்கலாசாலை

1929ஆம் ஆண்டில் இரண்டு முக்கியமான விடயங்களில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஈடுபட்டது. அவையாவன

1) வசதி குறைந்த பிள்ளைகளுக்கான (அனாதைப்) பிள்ளை களுக் கான விடுதி அமைத்தல்
2) சங்கத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யினை அமைத்தல்

கிறிஸ்தவ சமயத்தவர்களின் கல்வி நடவடிக்கைகளில் மிகவும் பயன்மிக்க செயற்பாடுகளாக இந்த இரண்டு விடயங்களும் முதன்மை பெற்ற நிலையில் இருந்ததைக் கண்ட சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் தாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும் எனத் தூண்டப் பட்டிருந்தனர். இதனால் 1929 விஜயதசமி நாளன்று, ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கலாசாலையும், வசதி குறைந்த சிறார்களுக்கான இல்லமும் தொடங்கப்பட்டன.

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அமைக்கும் எண்ணம் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. அமெரிக்கன் மிஷனரி அமைப்பினர், 1860ஆம் ஆண்டுகளிலேயே, ஆண், பெண் ஆசிரிய பயற்சிக்கல்லூரிகளை முறையே தெல்லிப்பழை, உடுவில் ஆகிய இடங்களில் அமைத்திருந்தனர். சேர்ச் மிஷனரி அைப்பினர் கோப்பாயில் ஆண்களுக்கான பயற்சிக் கல்லூரியையும் நல்லூரில் பெண்களுக்கான பயிற்சிக் கல்லூரியையும் நிறுவினர். வெஸ்லியன் மிஷனைச் சார்ந்தவர்கள் கொட்டடி, வேம்படி ஆகிய இடங்களில் முறையே ஆண், பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி களை அமைத்திருந்தனர். மட்டக்களப்பில் அரசடி என்ற இடத்திலும், ஆண்களுக்கான பயிற்சிக்கல்லூரி அமைக்கப்பட்டிருந்தது. றோமன் கத்தோலிக்க சமயத்தவர்களின் ஆண்கள் பயிற்சிக் கல்லூரி கொழும்புத் துறையிலும், பெண்கள் பயிற்சிக்கல்லூரி பெண்கள் தமிழ்கன்னியர்மடப் பாடசாலையிலும் நடத்தப்பட்டது. இவையொவ் வொன்றுடனும் ஆதரவற்றவர்களுக்கான விடுதிகளும், தொழிற்பயிற்சிக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன என்பதும் அவதானிக்கப்பட்டது. இவை ஆசிரியர்களின் பயிற்சிக்கான வசதியை வழங்குவனவாயிருந்தன. சைவ சமயத்தவர் இத்தகைய கல்லூரிகளில் இடம் பெறுவதற்கு வாய்ப் பிருக்கவில்லை. கீரிமலையில் இத்தகைய கல்லூரி ஒன்றை அமைப்ப தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்க வில்லை. இதனால் அரசாங்க பயிற்சிக்கலலூரி ஒன்றை அமைக்கவேண்டு மென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவ்வேளையில் சேர்ச் மிஷன் அமைப்பின் கோப்பாய் பயிற்சிக் கல்லூரியை எல்லா மதப்பிரிவினரையும் இணைத்த கல்லூரியாக மாற்றம் செய்தனர். அந்தக் கல்லூரியுடன் இணைந்த வகையிலான திட்டத்தன் கீழ் அறுபது ஆசிரியர்கள் வரையில் பயிற்சி பெற்றனர். ஏழு ஆண்டுகள் இக்கல்லூரி இயங்கியபின் நிறுத்தப் பட்டது. மீண்டும் சைவசமயத்தவர்களின் அரசாங்க ஆசிரிய பயிற்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக்கான விண்ணப்பங்கள் காரணமாக 1923ஆம் ஆண்டில் அரச ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட்டது.

அரச கல்லூரியின் அனுமதித் தொகை, புதிதாக ஏற்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், திரு இராசரத்தினம் அவர்களின் முயற்சி காரணமாக, கல்விப்பணிப்பாளர், சைவஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை அமைப்பதற்கு அனுமதி வழங்கினார். இத்தகைய பின்னணியில் 1928 ஒக்டோபரில், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. கோலாலம்பூரில் பணியாற்றிய திரு இராஜேந்திரா என்பவரது இல்லத்தில் தற்காலிகமாகக் கல்லூரி நடைபெறத் தொடங்கியிருந்தது. 22மாணவர் களுக்கான முதலாண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டன. இக்கல்லூரியின் அதிபர் பதவியை முதலாம்தர ஆங்கில பயிற்றப்பட்ட ஆசிரியரான திரு.கே.கிருஷ்ணபிள்ளை என்பவர் பெற்றிருந்தார். புகுமுக வகுப்பில் 81 மாணவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். சைவ சமயத்தைக் கற்பிக்கும் கௌரவ விரிவுரையாளராக (சைவப்பெரியார்) எஸ்.சிவபாதசுந்தரம் கற்பிப்பதற்கு இணங்கியிருந்தார்.[32] ஆண்களுக்கான பயிற்சியை மட்டுமே இக்கல்லூரி வழங்குவதற்கு அரசாங்கம் அங்கீகரித்திருந்தது. 1946 ஆம் ஆண்டளவில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. பெண்களுக்கான பயிற்சிக் கல்லூரி அரசாங்கத்தினால் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிலத்தில் நடத்தப்பட்டது.

தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் ஆசிரியப் பயிற்சியைப் பெறுவதும் சிக்கல் மிக்கதாகவே இருந்தது. தேவரையாளி இந்துப்பாடசாலையில் இருந்து ஆசிரியபயிற்சி முடித்தவராக மு.செல்லையா என்பவர் மட்டுமே இருந்தார். அவர் கோப்பாய் சைவ ஆசிரிய கலாசாலையிற் பயிற்சியை (1927இல்) நிறைவு செய்து கொண்டார். 1922 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் ஆசிரிய பயற்சிக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களும்

[32] Hindu Board of Education. (1930). *Report to the end of Year:*31-32

[33] *வட அல்வை முருகேசனார் பவள விழா மலர் (1993) பக்.18-20*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி பெறமுடிந்தது. ஆனால் சமாசன, சமபோசன சட்டம் அமுலுக்கு வந்த பின் சூரனால் அமைக்கப்பட்ட தேவரையாளி சைவப்பாடசாலையில் கல்வி கற்பித்த கந்தப்பு முருகேசு எனபவர் ஆசிரியர் பயிற்சி பெறுவதில் பல தடைகளை எதிர் கொள்ள வேண்டியவரானார். சமாசன, சமபோசன விடயம் காரணமாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் சிறிது காலம் இயங்காதிருந்தது.[33] ஆயினும் அரசாங்கம் கடைப்பிடித்த கடும்போக்கினால் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்து ஆசிரியர்கள் சமவாய்ப்புப் பெறும் நிலை ஏற்பட்டது.

## வசதியற்ற மாணவர்களுக்கான விடுதி

வசதியற்ற மாணவர்களுக்கான விடுதி அமைக்கும் காரியமும் ஆரம்பிக் கப்பட்டது. சங்கத்திடம் நிலம், கட்டடம் ஆகிய வசதிகள் இல்லாத வேளையில் திரு.எஸ். சபாபதிப்பிள்ளை என்ற பரோபகாரியின் உதவி காரணமாக ஒரு கட்டடம் வாடகை முறையில் பெறப்பட்டு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பெருமளவு மாணவர்கள் இணைந்து கொள்ள விரும்பிய போதிலும், இடவசதி போதாமை காரணமாக 63 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். சில மாணவர்கள் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பெறுவோராயிருந்தனர். ஏனைய மாணவர்கள் மேற்குறிப்பிட்ட சபாபதிப்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்ட முத்துத்தம்பி வித்தியாசாலையில் கல்வி கற்றனர். விடுதி அமைப்பதற்காக ஒரு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பகுதியும் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.திருமதி கே கந்தையா அவர்களால் வழங்கப்பட்டது. இந்த இரண்டு அமைப்புகளுக்கும் தேவையான நிலப்பகுதிகள் நன்கொடையாகவும் வழங்கப்பட்டன. பொதுமக்களிட மிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் பெறப்பட்ட பணத்தினால் மேதிக நிலங்கள் நியாயமான விலையில் பெறப்பட்டன. நிதியுதவி பெறப்பட்டு வேண்டிய கட்டடங்களும் நிறுவப்பட்டன.1930 ஆம் ஆண்டில் பயிற்சி பெறும் மாணவர் களாக 70 மாணவர்களும், புகுமுக மாணவர்களாக 143 மாணவர்களும் இணைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 32மாணவர்கள் வசதி குறைந்த மாணவர்களாக இருந்தனர்.[34] 1958ஆம் ஆண்டு அறிக்கையின்படி சங்கத்தின் பராமரிப்பின் கீழ் ஆண், பெண்சிறுவர்கள் 300ற்கும் அதிகமானவர்கள்

[34] Hindu Board of Education. *Report to the end of Year* (1958) : 31-32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். சிறுவர்களுக்கு அரசாங்க உதவி வழங்கப்பட்டது. அதற்கும் மேலாக 150ற்கும் அதிகமான வயது வந்தவர்களையும் சங்கம் பராமரிக்கும் பொறுப்பைச் செய்திருந்தது. அதற்கான உதவி வழங்கும்படி, சங்கம் பொது மக்களிடம் வேண்டுதல் விடுத்திருந்தது. அத்துடன் மேலதிகமான விடுதிகள் அமைக்கப்படுவதன் அவசியத்தையும் வெளியிட்டிருந்தது.

## கல்வியும் போதனை மொழியும்.

யாழ்ப்பாணத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பமான, மத, மொழி அபிமானம் கொண்ட எழுச்சியானது, சைவமும், தமிழும் என்ற இரண்டையும் ஒன்றுடனொன்று இணைத்த போக்கினைக் கொண்டதாக இருந்தது. சிங்கள் மக்கள் மத்தியில் பௌத்தமும், சிங்களமும் என்றதாக அமைந்திருந்தது. ஆயினும் தமிழ் மக்கள் மத்தியில், ஆங்கிலக் கல்வி மீதான அளவு கடந்த ஈடுபாடு இருந்ததை மறுக்க முடியாது. இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலும், மொழி பற்றிய அழுத்தம் குறைவாகவும், மதம் பற்றிய அழுத்தமே அதிக மானதாகவும் இருந்தது. கிறிஸ்தவ மிஷனரி பாடசாலைகளில் கல்வி கற்ற ஆறுமுக நாவலர் தொடக்கம் அனைத்து மத அபிமானிகளும், சைவ சமயம் பற்றி அதிகம் பேசினரன்றி ஆங்கில மொழியை வெறுக்கவில்லை. ஆங்கிலப் பாடசாலைகள் அமைத்தல், ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிடல் என்பன அவர்களின் செயற்பாடுகளில் ஒருமுக்கியமான அங்கமாக இருந்தது. ஆங்கிலம் மட்டுமன்றி, சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளும் சைவவித்தியாவிருத்திச் சங்கப்பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன எனவும் அறிய முடிகிறது. (தகவல் பேராசிரியர் பொ.இரகுபதி )

சைவ வித்தியா விருத்திச் சங்கம், அமைத்த பாடசாலைகள் அதிகளவு சுயமொழிப்பாடசாலைகளாகவே இருந்தன. சில பாடசாலைகள் இரு மொழிப்பாடசாலைகளாகவும், சில ஆங்கிலப் பாடசாலைகளாகவும் இருந்தன. 1920களில் மாணவர் காங்கிரஸ் அமைப்பினரே கல்வியில் சுதேச மொழி நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர். டொனமூர் குழுவினரின் வருகையும், சர்வஜன வாக்குரிமை வழங்கியமையும், இதனை மேலும் வலியுறுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> …Jaffna took the lead in the *Swabhasha* agitation from as early as 1925 with the Jaffna Youth Congress in the forefront of it. They retained their lead in this till well into the 1930's. Thus in 1934 we see the Northern Province Teachers Association adopting a resolution demanding "free and compulsory education with teaching in the vernaculars as far as possible in all subjects except English."[35]

1939 இல் கொண்டுவரப்பட்ட கல்வி மசோதா (Education Ordinance 1939), இலவசக் கல்விக்கும், சுயமொழிக்கல்விக்கும் விருப்புக்கொண்ட சிங்கள, தமிழ் அரசியலாளர்களின் வரவேற்பைப் பெற்றுக் கொண்டது. அது ஒரு வகையில் மதசார்புக் கல்விநிறுவனங்களின் செயற்பாட்டிற்கும், ஆங்கிலக் கல்விகற்ற முன்னைய அரசியல்வாதிகளின் இருப்புக்கும் எதிரானதாக அமையும் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தது. ஆங்கிலத்தை விட்டுச் சுயமொழிக்கல்வியைப் பின்பற்றுவதால் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழி களும் முன்னிலைக்கு வரமுடியும் என்பதும், இரு சமூகத்தவர்களும் இரண்டாம் மொழியாகப் பரஸ்பரம் இரண்டு மொழிகளையும் கற்கலாம் எனவும் கருதினர். அந்த அடிப்படையில், 1938 – 40காலப்பகுதியில், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் தமது நிர்வாகத்திற்குட்பட்ட பாடசாலை களில் சிங்களத்தைக் கட்டாய பாடமாகக் கற்பிக்கும் முயற்சியி லீடுபட்ட னர்.[36] ஆனால் தமிழ்ப்பகுதிகளில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் மேற்கொண்டது போன்று சிங்களமக்கள் மத்தியில், எவராலும் இத்தகைய முயற்சி பின்பற்றப்படவில்லை. ஆங்கிலம் என்ற தொடர்புக் குரிய மொழி (Link-Language) கல்வித்துறையிலும், இரு சமூகங்களுக் கிடையிலும்

---

[35] De Silva, K.M. (1981) *Managing Ethnic tentions in Multi-Ethnic Societies-Sri Lanka 1880-1985*.Lanham:University Press of America. …pp.75

[36] 1938-1940 காலப்பகுதியில் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்பட்டமை பற்றிய செய்தியை இக் கட்டுரையினை எழுதுபவரும் அறிந்துள்ளார். (வாசித்த அல்லது கேள்விப்பட்ட ஒரு விடயம்.) இதனைக் K.M.De Silvaவும் குறிப்பிட்டுள்ளாார். அவர் தமது கூற்றுக்கு ஆதாரம் காட்டவில்லை. யாரேனும் ஆதாரம் இருந்தால் அறியத் தரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகித்த பங்கு, குறைவடைந்ததுடன் தமிழ் – சிங்கள மொழி அடிப்படை யிலான பேதம், விரிசலடைந்தது. இது குறித்து கருத்து தெரிவித்த K.M.De Silva 'மொழி, வர்க்கம் என்ற அடிப்டையில் இருந்த முரண்பாடுகள் இப்பொழுது மொழியை மட்டும் மையப்படுத்தியதாக ஆயிற்று' என்று குறிப்பிட்டிருப்பது பொருத்தமே. இதன்போது அவர் யாழ்ப்பாணத்தில் எல்லா இந்துப் பாடசாலைகளும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளமை தவறானதாகும். இக்காலத்தில் இருந்த 500ற்கு மேற்பட்ட பாடசாலைகளில் 150 வரையிலான பாடசாலை களே சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கின. சில சைவப் பாடசாலைகள் தனியார்களிடமும் இருந்தன.[37] இத்தகைய தவறு ஏனைய வரலாற்று நூல்களிலும் இடம் பெற்றுள்ளது. இவருடைய கருத்தை மேற்கோள் காட்டி நீரா விக்கிரம சிங்க யாழ்ப்பாணத்தில் இருந்த எல்லாப் பாடசாலைகளும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார்.[38]

### தர்மபுரம் பாடசாலை

1958ஆண்டு அவசரகால நிலைமையின் காரணமாக பரந்தன் – முல்லைத் தீவு றோட்டில் எட்டாவது கட்டைக்கும் ஒன்பதாவது கட்டைக்கும் இடையில் ஆயிரம் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களைக்கொண்ட அறுநூற்றிற்கும் மேற்பட்ட குடும்பங்களள் வந்து குடியேறின. அங்கு அவர்களின் பிள்ளைகள் படிப்பதற்கு வசதியில்லாதிருந்தது. அவர்களின் பெற்றோர் சங்கத்திடம் கோரிக்கை யிட்டனர். சங்கம் முதலில் அவர்களது பிள்ளைகளில் 150 பேர்களை, முரசுமோட்டையில் இருந்த பாடசாலையில் சென்று கற்பதற்கு வாகன வசதி செய்தது. காலநிலை காரணமாக

[37] De Silva, K.M. (1981) pp.77

[38] Wickramasinghe, Nira (1981). *Ethnic Politics in colonial Sri Lanka 1927-1947*. New Delhi: p.129. There had been a movement encouraged by the Hindu board of Education in the North of the country towards making Sinhalese compulsory in all their schools. The Hindu Board of Education had been founded in 1888 in Jaffna by followers of Navalar's teaching, in order to counter the religious intolerance displayed by Christian Missionary schools. In the late 1930's it controlled all the schools in the North.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு வரத்து சீரில்லாமை ஏற்பட்டதைத் தொடர்ந்து, பெற்றோர்களின் வேண்டுதலின்படியும், அரசாங்க அதிபரின் அனுமதியுடனும் அவர்களுக்குத் தற்காலிக பாடசாலை நடத்தப்பட்டது. 1958 நொவெம்பர் தொடக்கம், தருமபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட வந்து குடியேறிய மக்களுக்கான குடிசைகளில் பாடசாலை நடத்தப்பட்டது. பதினாறு ஆசிரியர்கள் கடமை புரிந்தனர். மாணவர்களுக்கு உடை முதலியனவும், ஆசிரியர்களுக்கு மதிய போசனமும், சம்பளமும் வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குவதற்கு நிதியுதவி வழங்குமாறு சங்கம் கேட்டுக் கொண்டது.[39]

இத்கைய செயற்பாடுகள் காரணமாகச் சங்கம் 1958 ஆம் ஆண்டளவில் ஒரு பரந்து விரிந்த நிறுவனமாக வளர்ச்சி பெற்றது.

[39] Hindu Board of Education. (1958). *Report to the end of Year 1958*. Chunnakam: Thirumakal Press.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தில் கல்வியின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டிருந்தது. கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கல்விச் செயற்பாடுகளும், தனியார் முயற்சிகளாலான கல்விச் செயற் பாடுகளும் அதிகரித்திருந்தன. இதன் தொடர்ச்சியாக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கல்வி நடவடிக்கைகள் அமைந்திருந்தன. பாட சாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆதரவற்ற சிறார்களுக்கான விடுதியுடன் கூடிய கல்வி, ஓரங்கட்டப்பட்ட சமூகத்தவர்களுக்கான கல்வி, கஷ்டப்பிரதேசங்களுக்கான கல்வி, பராமரிக்கமுடியாத பாடசாலைக ளைப் பொறுப்பேற்றல், தொழிற்கல்வி, வயது வந்த ஆதரவற்றவர்களுக் கான பராமரிப்பு, என ஒரு சிறந்த வலையமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இவர்களது கல்வி நடவடிக்கைகளில் சுயமொழிக் கல்வியே அதிகம் முதன்மை பெற்றிருந்தது. சில பாடசாலைகள் இருமொழிப்பாடசாலை களாக நடத்தப்பட்டன. 1930 – 40 களில் சிங்கள மொழியைக் கற்பிக்கும் முயற்சிகளும் இடம் பெற்றிருந்தது. இன்றைய காலகட்டத்திலும், அக்காலத்தில் இருந்த பாடசாலைகளின் எண்ணிக்கையைவிடப் புதிய பாடசாலைகள் உருவாக்கப்படவில்லை என்றே கூறலாம். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஆதரவற்றவர்களுக் கான விடுதி இன்றும் தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அங்கு சாதி வேறுபாடு பாராட்டாமல் எல்லாப் பிள்ளைகளும் ஏற்கப்படுவது குறிப்பிடத் தக்கது.

### தலைமைத்துவம்

இச்சங்கத்தினுடைய செயற்பாட்டிற்கு பல அரசியற் தலைவர்களும், பல சமூக முன்னேற்ற விரும்பிகளும், பெருந்தொகையான சாதாரண மத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிமானிகளும் தமது பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள். சமூகத்தின் முன்னேற்றத்தில் ஈடுபாடுள்ள மக்களும், சமய, சமூக, அரசியற் தலைவர்களும் இணைந்து கல்விச் செயற்பாடுகளில் அக்கறையுடன் ஈடுபட்டிருந்தனர். சில தலைவர்களின் விடாப்பிடியான செயலூக்கமும், அர்ப்பணிப்பும், பகிரங்கமாக விவாதித்து காரியங்களைச் செய்யக்கூடிய வெளிப்படைத் தன்மை ஆகியவை அடிப்படையாக அமைந்திருந்தன. இந்த அமைப்பின் வெற்றிக்கு உதவிய காரணிகளில் முக்கியமானவையாக சமூக அபிமானம் கொண்ட தலைவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு என்பது அமைந்திருந்தது. சங்கத்தை உருவாக்கிய ஆரம்பகர்த்தாக்கள், சங்கத்தின் செயற்பாடுகள், பொறுப்புகள், அங்கத்துவம், நிதி கையாளுதல் ஆகிய விடயங்கள் யாவற்றையும் செயற்படுத்தும் வழிவகை பற்றிய திட்டவட்டமான யாப்பினை உருவாக்கியிருந்தார்கள். சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி எவரும் கருத்து தெரிவிக்கவும், விமர்சிக்கவும் வாய்ப்பிருந்தது. அது சங்கத்தின் நீடிப்பிற்கு உதவியது.

இவை யாவற்றிற்கும் மேலாக திரு சு.இராஜரட்ணம் சங்கத்தின் ஆரம்பகாலம் தொடங்கி சங்கத்தின் பாடசாலைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்வரை, பாடசாலைகளை அமைப்பதிலும், மாணவர்களுக்குக் கல்வியை வழங்குவதிலும், ஆசிரியர்களை உருவாக்குவதிலும் பெரும் சேவையாற்றினார். ஆயினும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரும், இராசரத்தினம் அவர்களும், சகல பாடசாலைகளை மட்டுமன்றிச் சைவ ஆசிரிய கலாசாலையினையும் அரசாங்கத்திடம் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை என்பது பற்றிய அதிருப்தியும் உண்டு. பௌத்த மத நிறுவனங்களின் கல்வி நியைங்கள் தொடர்ந்து பௌத்த கல்விக்குப் பயன்படுத்தப்பட்மை போல, இவர்களும் மாற்று ஒழுங்குகளை மேற்கொண்டிருக்க முடியாதா என்ற கேள்வியுண்டு.

### நிதி

இதற்கு வசதியுள்ளவர்கள் மட்டுமன்றி மிகவும் வறியவர்களும் கூடத் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். கல்விகற்று, இலங்கையின் பிற பாகங்களிலும், வெளிநாடுகளிலும் வாழந்தவர்கள், வர்த்தகர்கள், சிறுமுயற்சியாளர்கள், ஆசிரியர்கள் எனப் பலரதும் உதவி கிடைக்கப் பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலியில் வாழ்ந்த பரோபகாரிகளின் நிதிஉதவியும், நில, கட்டடக் கொடைகளும் கிடைத்திருந்தமை குறிப்பிடப்படவேண்டியது.

### தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் கல்வி

தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் கல்வியிலும் மிதமான கொள்கையைக் கடைப்பிடித்தாயினும் உரிய பங்களிப்பை வழங்கியிருந்தது. ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் கல்வி குறித்துக் கவனம் செலுத்திய சங்கம், அவர்களுக்குத் தனியான பாடசாலைகளை அமைத்தது. 'சமாசனம்' பற்றிய விடயத்தில் சைவ மக்களிடம் பெரும் எதிர்ப்பை எதிர் கொண்ட போதிலும், அரசாங்கத்தினதும், முற்போக்கு சிந்தனையாளர்களினதும் முயற்சிகள் காரணமாகப் படிப்படியாகச் சமூக மாற்றத்தை உறுதி செய்யக் கூடியதாக இருந்தது. இந்த விடயம் சில வார்த்தைகளில் சொல்லி முடிப்பதாக அமையாது. எனினும், சமூகமாற்றதை ஏற்படுத்துவதற்கான ஒரு காலகட்டத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பு வகித்த திரு சு.இராசரத்தினம் அவர்களின் பங்களிப்பு முக்கியத்துவமுடையது. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் களின் மனதில் சாதி அடையாளம் பற்றிய உணர்வு சற்று வேறுபட்டதாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. தாழ்தப்பட்ட சமூகத்தவர்களில் குறிப்பிட்ட பகுதியினர் மதம் மாறுவதை விரும்பவில்லை. சூரனின் செயற் பாடுகள் இதனைக் காட்டுகின்றன. அத்துடன் சாதி என்ற அடையாளத்தை ஏற்றுக் கொள்ளவும் விரும்பவில்லை. சிவியாதெருவில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களுக்கு என அமைக்கப்பட்ட பாடசாலைக்கு ஆரம்பத்தில் நந்தனார் வித்தியாசாலை எனப் பெயரிடப்பட்டிருந்தது. பின்னர் அதன் பெயர் ஆனந்த வித்தியாசாலை என மாற்றப்பட்டது. அந்தப்பாடசாலையில் ஆரம்பக் கல்வி பெற்றவர்கள் பலர் பின்னர் உயர் பதவி பெற்ற வரலாறும் அதிகம் உண்டு. தாழ்த்தப்பட்டவர்களின் விடயத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் இடம் பெறவில்லையாயினும், படிப்படியாக மாற்றங்கள் இடம் பெறுவதற்றான ஆரம்பமாகக் கல்வி அமைந்திருந்தது. அத்துடன் தாழ்த் தப்பட்ட பிள்ளைகளுக்கென, தனியான வகையில் ஆரம்பிக்கப்பட்ட பாட சாலைகள், காலப்போக்கில் சைவ விருத்தியா விருத்திச் சங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டமை சுட்டிக் காட்டத் தக்கது. தேவரையாளி இந்துக் கல்லூரி சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் கொடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதற்கான முயற்சிகள் சூரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் வதிரி மக்களால் தொடர்ந்து நடத்தப்பட்டது.

## பயன்பாடுகள்

இந்த அமைப்பின் செயற்பாடுகள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களில் முக்கியமானவையாக சங்கத்திற்கும், சமூகத்திற்கும் விசுவாசம் மிக்க மாணவர்களையும், ஆசிரியர்களையும் உருவாக்கியிருந்தமை பிரதானமான தாகும். அவர்களிடம் கடமை, கட்டுப்பாடு, பாரம்பரிய விழுமியங்கள் பேணும் பண்பு, ஆகியவை மிகுந்து காணப்பட்டன. அக்கால ஆசிரியர்கள், சைவ ஆசிரியர்கள் கலாசாலையில் பயிற்சி பெற்றிருந்தனர். அவர்கள் மாணவர்கள் மத்தியில் முன்னுதாரணமாகச் செயற்படுவோராகவும் இருந்தனர். இது மாணவர்களின் ஒழுக்கத்தில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கினையும், தாக்கத்தினையும் ஏற்படுத்துவதாக அமைந்தது.

ஆதரவற்ற மாணவர்களுக்குக் கல்வி வழங்கி மேனிலைப்படுத்தியமை காரணமாகச் சமூகத்தில் வசதியற்றவர்கள், வாய்ப்புகளைப் பெறக் கூடியதாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், சமூகத்தின் வளர்ச்சியில், சமூக ஆர்வலர்களும், சமூக நிறுவனங்களும் கொண்டிருந்த அக்கறையினையும், முன்னுதாரணமான செயற்பாடுகளையும் வெளிப்படுத்தும் வகையில் இச்சங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

இலங்கைத் தமிழ் மக்களின் கல்வித்துறை வரலாற்றில், மக்கள் மயப்பட்ட கல்வியை வழங்குவதிலும், சமயத்தையும் கல்வியையும் ஒருங்கிணைத்துப் பரவலடையச் செய்வதிலும் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் காத்திரமானவை.

> " ... கிராமங்கள் தோறும் ஒவ்வொரு மூலை முடக்கிலும் காலூன்றியிருந்த கிறிஸ்தவ அமைப்புகளுக்கு நிகராக, அவற்றைச் சமநிலையில் எதிர்த்து நிற்கக் கூடிய, பரவலான செயற்பாட்டு வீச்செல்லையைக் கொண்ட கட்டுக்கோப்பான அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயிகளிடம் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. சைவபரிபாலன சபை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உருப்பெற்று விட்டதென்றாலும் அதன் செயற்பரப்பெல்லை குறுகியதாகவே இருந்தது. ஏனைய முயற்சிகள் எல்லாம் தனிநபர் முயற்சிகளாகவே இருந்தன.

அப்படியான ஒரு நிலைமை, அக்குறைபாட்டினைப் போக்கக்கூடிய ஒரு நிறுவன அமைப்பின் "தோற்றத்தினை அவாவி" நின்றது. அந்தத் தேவையினை நிறைவு செய்வதாக அமைந்தது, "சைவ வித்தியா விருத்திச் சங்கம்". இச்சங்கத்தின் வரலாற்றுடன் இரண்டறக் கலந்து "இந்து போர்ட் இராசரத்தனம்", என்று பெயர் பெற்றவர் மாண்பு மிகு எஸ்.இராசரத்தினம் அவர்கள்.சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினை வழிநடத்தி, சைவக்கல்வியினை இருபதாம் நூற்றாண்டில் ஏற்றம் பெறச் செய்த அவருடைய வினைத்திறனும், தலைமைத்துவ ஆற்றலும் கூரிய விமர்சனத்திற்கு உரியவையாகும்."[40]

என்பது பேராசிரியர் வ.ஆறுமுகம், அவர்களால், மேற்படி அமைப்பின் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தாகும். இச் சங்கத்தின் தொடக்க காலத்தில், பல சமூக ஆர்வலர்களும், அரசியற் பிரமுகர்களும் இச்சங்கத்தில், ஈடுபாட்டுடன் செயற்பட்டிருந்தனர். 1930களின் பின்னர் சங்கத்தில் ஒருங்கிசைவுக்குப் பதிலாகப் பிரச்சினைகளும், போட்டிகளும் ஏற்படத் தொடங்கியிருந்தன. பல தலைவர்கள் மறைந்து போயினர். பலர் விலகிக் கொண்டனர். இந்த நிலையில் இராசரத்தினமும், பல சமூக ஆர்வலர்களுமே தொடர்ந்து செயற்பட்டனர். இராசரத்தினம் அவர்களை நோக்கியும் பல குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. பல்வேறு விமர் சனங்கள் கண்டனங்கள் இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டபோதிலும் அவற்றை எல்லாம் தாங்கி, தொடங்கிய ஒரு பயணத்தைச் சீராக நடத்தி முடித்தார். இதற்கும் மேலாக சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் இணைந்த வகையிலே ஆதரவற்ற சிறுவர்களுக்காக நடத்தப்பட்டு வந்த அநாதை இல்லங்களின் வாயிலாக இரண்டு தலைமுறை சமூகத்தவர்களை

[40] ஆறுமுகம்,வ. பக். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையேற்றவதிலும் இவர் தனது வாழ்நாளைக் கழித்திருந்தார். நாவலரின் சைவமும் தமிழும் பற்றிய சிந்தனை பழமை பேணுவதாகவும் எல்லைக்குட்பட்டதாகவும் இருந்தது. இராஜரத்தினம் போன்றவர்களின் சிந்தனை அந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்டதாகவும் சமூகத்தை முன்னோக்கி நகர்த்தும் வகையிலே அமைந்ததாகவும் இருந்தது.

இச்சங்கம் தமது செயற்பாடுகளைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, 1929ஆம் ஆண்டில் வெளியான வருடாந்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளதுஹ – "சமீப காலத்திற் சைவசமயிகளால் ஆரம்பிக்கப் பெற்ற இயக்கங்கள் எவற்றிலும் சைவவித்தியாவிருத்திச் சங்கமே மிகப் பெரியதாகும். சைவப்பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் தமது பொறுப்பு யாது, கடமை யாது, என்பவற்றைச் சைவசமயிகள் சிறிது காலத்தில் விரைந்து விழித்தெழுந்து உணரும்படி இச்சங்கம் செய்தது போல், வேறெந்த ஸ்தாபனமுஞ் செய்தது கிடையாது. எவ்வளவோ தடை, தாமதங்களிருந்தும் இது வரையும் சைவசமயத்துக்கும் கல்விக்குமாகத் தொண்டு புரிந்து வந்தவர்கட்கு இச்சங்கம் புதிய நம்பிக்கையையும், புதிய உற்சாகத்தையும் புதிய நோக்கத்தையும் அளித்ததாகும். மிக்க அவசியமானதும் அரியதுமான காலத்திலேயே இச்சங்கம் ஆரம்பமாயிற்று." என்ற இக் கூற்று இன்றைய நிலையிலும் சங்கத்தின் செயற்பாடுகளை ஆராயும்போது நியாயமானதாகவும், பெறுமதியானதாகவும் தெரிகிறது. காலனித்துவ செல்வாக்கின் காரணமாக நீடித்த, சமயத்திற்கும் கல்விக்கும் இடையிலான பிணைப்பு தளர்ந்து சமய சார்பற்ற அல்லது சமயங்களின் எல்லைகளை மேவிய கல்வி பற்றிய நோக்கு நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தால் கூடிய நன்மையும், சிக்கலற்ற சமூக மேம்பாடும் ஏற்பட்டு, விளைவுகளும் வேறுபட்டதாக அமைந்திருக்கலாமா? என்ற கேள்வியும் எழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரையாளரின் பின்குறிப்பு

மேற்படி கட்டுரை, 30.04.2014 அன்று பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டது. அரங்கிற்கு பீடாதிபதி, பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் சமூகமளித்திருந்தனர். பீடாதிபதி கருத்துரை வழங்கியிருந்தார்.

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் அவர்களும், இந்த அரங்கிற்கு சமூகமளித்திருந்ததுடன், கட்டுரையில் உள்ளடங்க வேண்டிய சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார். சோ. பத்மநாதன் அவர்கள் இக்கட்டுரைக்கு அணிந்துரையும் வழங்கி உதவியுள்ளார்.

கருத்தரங்கிலும், அணிந்துரையிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களில், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆரம்ப காலச் செயற்பாடுகளில் 'சமாசனம்' என்ற விடயத்திற்கு அதிக இடமளிக்கப் பட்டமை சுட்டப்பட்டது. கல்வி, சமூகம், அரசியல், தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற நோக்கில் பார்க்கும்போது, யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றில் 'சமாசனம்' என்ற விடயம் முக்கியத்துவம் வாய்ந்தது. அது மட்டுமன்றித் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக அசைவியக்க வரலாற்றிலும், 'சமாசனம்' முக்கியமானதொரு படிக்கல்லாக அமைந்துள்ளது. இவற்றின் காரண மாகவே அந்த விடயம் பற்றி அதிகம் எழுத வேண்டியதாயிற்று. அத்துடன் சமூக வரலாற்றெழுத்தியலிலும் 'சமாசனம்' பற்றிய வெவ்வேறு விதமான கருத்துக்கள் பயிலப்பட்டு வருவதனால், அது பற்றிய மூல ஆதாரங்களை எடுத்துக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள் குறித்த இக்கட்டுரை, அரச ஆதரவோடு கிறிஸ்தவ மிஷனரிகள் செய்த மதமாற்றத்தை சங்கம் எதிர்த்து நின்றதையும், யாழ்ப்பாணம் தொடக்கம், வன்னி, மலையகம், கிழக்கிலங்கை வரை தன் கல்விப்பணியை விரிவுபடுத்தியதையும், ஏழைப்பிள்ளை களுக்கு இலவசக்கல்வி அளித்ததையும், சைவாசிரியர்களைப் பயிற்றுவிக்க ஓர் ஆசிரிய கலாசாலை நிறுவியதையும், தொழிற்கல்விக்குப் பாடவிதானத்தில் இடமளித்ததையும், குறிப்பிட்டாலன்றிப் பூரணமாகாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.'

என்பது அணிந்துரையில், திரு சோ.ப அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களாகும்.

'அரச ஆதரவோடு கிறிஸ்தவ மிஷனரிகள் செய்த மதமாற்றத்தை சங்கம் எதிர்த்து நின்றது' என்ற விடயம் ஆழமாக ஆராயப்பட வேண்டியதாகும். யாழ்ப்பாணம் தொடக்கம் வன்னி, மலையகம், கிழக்கிலங்கை வரை தன் கல்விப்பணியை விரிவுபடுத்தியிருந்தது என்பது அழுத்தம் பெற வேண்டியதே. ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி வழங்கியது சங்கத்தின் செயற்பாட்டில் முதன்மையானதாகும். அங்கு இலவசக்கல்வி பெற்றவர்கள் சிறந்த சமூக நிலையை அடைந்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அங்கு கல்விகற்ற மாணவர்களுக்கு வழங்கிய ஆதரவும், கல்வியும், ஒழுக்கப்பயிற்சியும் சமூகத்திற்குச் செய்யப்பட்ட பெரும் பணி என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

சைவாசிரியர்களைப் பயிற்றுவிக்க நிறுவப்பட்ட சைவாசிரியகலாசாலை, சங்கத்தன் கீழ் இயங்கிய பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்களை உருவாக்குவதற்கு உதவியது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின், சைவ ஆசிரியர் கலாசலையில் தகைமை சான்றவர்களான, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பொ.கைலாசபதி ஆகியோரும் விரிவுரையாளர்களாக இருந்தனர். இப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் சுத்தமாக மொழி, சமயம், ஏனைய பாடங்கள் ஆகியவற்றைப் போதிக்கக்கூடியவர்களாகவும் சிறந்த விழுமியங்களைப் பேணுவோராகவும் இருந்தனர். தொழிற் கல்வியாக பன்னவேலை, நெசவு வேலை ஆகியன பயிற்றுவிக்கப்பட்டன என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கொள்ளப்பட வேண்டியதே. இவற்றைச் சுட்டிக்காட்டிய சோ.பத்மநாதன் அவர்களுக்கு நன்றிகள் உரித்தாகும்.

கருத்தரங்கில் அரசறிவியற்றுறை விரிவுரையாளர் எஸ். விக்கினேஸ்வரன், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் ஏனைய மதத்தவர் களின் கல்வி பற்றிக் கொண்டிருந்த பங்கு தொடர்பாகக் கேட்டிருந்தார். கட்டுரையாளர் பதிலாகக் கிறிஸ்தவ மத கல்விச் செயற்பாட்டிற்கு மாற்றா கவே சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் அமைந்தன எனவும், இஸ்லாமிய கல்விச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு வரலாற்றில் முக்கியமானதொரு கட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் தொடர்பு படுத்தும் வகையில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உருவாக்கமும், அதன் ஆரம்பகாலச் செயற்பாடுகளும் அமைந்தன. பேராசிரியர், வ.ஆறுமுகம், பேராசிரியர் சந்திர சேகரம் ஆகியோர் இவ்விடயம் பற்றி, ஆங்காங்கே சில குறிப்புகளை எழுதியுள்ளனர். முழுமையாக இவ்விடயம் பற்றிய விடயங்களாக அவை அமையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அது பற்றிய தொடக்க ஆய்வாகவே இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரைக்கான தரவுகள் மேலதிகமாகக் கிடைக்கும் வேளையில் மேலும் திருத்தமாக எழுதிப் பிரசுரிக்க முடியும்.

பீட ஆய்வரங்களில் கலந்து கொண்ட பல்கலைக்கழக பீடாதிபதி, பேரா சிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு நன்றிகள் உரித்தாகும். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் அவர்கள் அணிந்துரை வழங்கிய மைக்காகவும், கருத்துரை வழங்கியமைக்காகவும், நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் சமூகச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருபவர் என்ற வகையில் அவரது கருத்துக்கள் பெறுமதி மிக்கவை.

**சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்**
07.05.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை References

### *Primary Sources*

**Hindu Board of Eduction**. (1929.). *Report to the end of Year 1929* .Jaffna: Saivapragasa Press.

**Hindu Board of Eduction**. (1930). *Report to the end of Year 1930*. Jaffna: Saivapragasa Press.

**Hindu Board of Eduction**. (1933). *Report to the end of Year 1933* . Jaffna: Saivapragasa Press

**Hindu Board of Eduction**. (1946). *Report to the end of Year 1946* . Chunnakam: Thirumakal Press.

**Hindu Board of Eduction**.. (1958). *Report to the end of Year 1958* . Chunnakam: Thirumakal Press.

**Ceylon Administrative Report** (1930), Northern Province, p. D 3 Colombo: Govt. Press

**Statiscal Abstract of Ceylon** (1949) .Colombo: Department of Census and Statistics

## பருவ இதழ்கள் Periodicals

முரசொலி தொடர் கட்டுரைகள்

Hindu Organ

Eelakesari

Ceylon Patriot

ஆத்ம போதினி (Aathmapothni )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Secondary sources

**Chelliah,** *J.V. A Century of American Mission...p.66*

**Handy Perinpanayagam Memorial Volume** (1980). Jaffna: Handy Perinpanagam Memorial Society

**Desai, M.** (1928) *With Gandhiji in Ceylon,* Madras :S.Ganesan Publisher

**De Silva, K. M.** (1973) *University of Ceylon History of Ceylon, Vol.III., Peradeniya*

**De Silva, K. M.** (1981) *History of Sri Lanka.* London:C.Hurst & Co.

**De Silva, K. M.** (1981*) Managing Ethnic tentions in Multi-Ethnic Societies-Sri Lanka 1880-1985.*Lanham:University Press of America.

**Ministry of education.** (1967). *Education in Ceylon, a centenary volumePart III.* Colombo: Dept of Education.

**Wickramasinghe,Nira** (1981).*Ethnic Politics in colonial Sri Lanka 1927-1947.* New Delhi: Vikas Publishing House Pvt. Ltd.

**Russel, J.** (1982). *Communal Politics under the Donoughmore constitution 1931-1947.* Colombo: Tisara Pirakakayo Ltd.

**T. Sabaratnam (2011)** *Sri Lankan Tamil Struggle* Chapter 21: Tamils Took the Wrong Road *http://sangam.org/2011/02/Tamil_Struggle_21.php?uid=4232*

**குலரத்தினம் க.சி.** (2010) *இந்துபோர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்.* யாழ்ப்பாணம். சைவவித்தியா விருத்திச். சங்கம்,

**ஆறுமுகம், வ.** (2000) *கல்விப் பாரம்பரியம்,* யாழ்ப்பாணம்ஹ உயர்கல்விச்சேவைப் பதிப்பகம்.

**சுந்திரபோஸ், எஸ்.** (1989) *தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி,* யாழ்ப்பாணம்.

**தர்மலிங்கம்,என்.கே.** (1987) *கீழைத்தேசக் கல்வியியற் சிந்தனைகள்,* யாழ்ப்பாணம்.

***வட அல்வை முருகேசனார் பவள விழா மலர்*** (1993) பவள விழா குழு. அல்வாய்.

**ராஜ ஸ்ரீகாந்தன்.** 2004) *சூரன் சுயசரிதை,* கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 1
## இந்து போர்ட் இராசரத்தினம் அவர்களின் வாழ்க்கை பற்றிய குறிப்புகள்



1884 ஆம் ஆண்டு ஜூலை 4ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் கதிரேசு. சுப்பிரமணியம்.

இவரது தாய்வழிமாமனாரே நீதிபதியாகத் தொழில் பார்த்த, அறிஞரான வைமன் கதிரவேற்பிள்ளை.

இவரது மூத்த சகோதரர் சுப்பிரமணியம் கதிரேசு(பிள்ளை). தேர்ந்த சட்டத்துறைஅறிஞரும், பல நூல்களை எழுதியவருமாவார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கொழும்பு சட்டக் கல்லூரியில் உயர் கல்வியையும் பயின்று, பெருஞ்சட்ட வல்லுனரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்துறையின் விதிகள், பாரம்பரியங்கள்,வழமைகள், முன்நிகழ்வுகள் எல்லாவற்றையும் கருத்தூன்றிக் கற்று அவற்றை ஆயிரக்கணக்கான பக்கங்களில் திரட்டாகத் தொகுத்து (Law Digest)வெளியிட்டிருந்தார். ஒரு போது நீதிவானாகவும் கடமை செய்திருந்தார் எனவும், அந்தப் பொறுப்பு மனதுக்குப் பிடிக்காதால், அப் பதவியைப் பெற விரும்பவில்லை எனவும், வாய்மொழித்தகவல் உண்டு.

இராமநாதன் அவர்களின் துணையுடன் 1923 ஆம் ஆண்டில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை நிறுவி, அதன் செயலாளராகவும் தலைவராகவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

'இந்து சாதனம்' பத்திரிகையின் ஆசிரியராகவும், யாழ்ப்பாணச்சங்கம் என்ற அரசியல் அமைப்பின் அங்கத்தவர்களில் ஒருவராகவும் செயற்பட்டிருந்தார். மதுவிலக்கு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

1924 –1930 காலப்பகுதியில், சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1954 ஆம் ஆண்டில் தனது வித்தியாசாலையில் பண்ணிசை ஆசிரியர்களை நியமித்து, பண்ணிசை வகுப்புக்களை ஆரம்பித்தார்.

இராசரத்தினம் நிறுவிய "சைவ ஆசிரியர் கலாசாலை" பல்வேறு துறைகளையும் சார்ந்த கல்வியை ஆசிரியர்களுக்கு வழங்குவதாக இருந்தது. சங்கத்திற்கான தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், கல்வி கற்றவர்கள் ஆசிரியத்தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவும் உதவியது.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரும் அனாதைப் பிள்ளைகளின் இல்லத்தைத் தொடர்ந்து நடத்தி வந்திருந்தார்.

இந்துபோட் இராசரத்தினம் 12.03.1970இல் இவ்வுலகை நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 2

# சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கிய பாடசாலைகளும், ஏனைய கல்வி சார் நிறுவனங்களும்

இந்த இணைப்பில் 1958 ஆம் ஆண்டு வரையில், அதன் நிர்வாகத்தின் கீழ் இருந்த பாடசாலைகள், இரு மொழிப்பாடசாலைகள் அநாதரவான ஆண், பெண் பிள்ளைகளுக்கான விடுதிகள், ஆசிரியர் கல்லூரிகள், நெசவுப் பயிற்சி நிலையங்கள் ஆகியவை பற்றிய பெயர்களின் பட்டியல் உருவாக்கப் பட்டுள்ளது. 1958ஆம் ஆண்டின் அறிக்கையே இறுதியானதாக உள்ளது. இது ஒரு முழுமையான வழுக்களற்ற பதிவு எனக் கொள்ளப்பட வேண்டிய தில்லை. சங்கத்தின் ஆண்டறிக்கைகளில் வந்த தகவல்களை அடிப்படை யாக வைத்துத் தொகுத்த போது சில பாடசாலைகளின் பெயர்கள் மாறி யிருக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளதால், பதிவுகள் இரண்டாக அமையும் சாத்தியங்கள் உள்ளன் சிலவற்றின் பெயர்கள் இடம் பெறாமல் இருப்பதற் கும் வாய்ப்புகள் உள்ளன் சில பாடசாலைகளின் தொடக்க ஆண்டும் திட்ட வட்டமானதெனக் குறிப்பிட முடியாது. ஆதலால் வாசிப்பவர்கள் இந்த விடயங்களை மனங்கொள்ளவேண்டும் எனவும், தவறுகளுக்கு மன்னிக்க வேண்டும் எனவும், மீள ஒரு பதிப்பு இடம் பெறும் வாய்ப்பிருந்தால் இவை திருத்தமடைய இடமுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பதிவைச் செய்ததன் நோக்கம், இவ்வளவு பாடசாலைகள் ( யாழ்ப் பாணத்தின் கஷ்டப்பகுதிகளான நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு, ஆகிய இடங்களிலும், பூநகரி, வவுனியா, பதுளை, பல்லவராயன் கட்டு, வாழைச்சேனை, நாவலப்பிட்டிய, புத்தளம், சிலாபம், செம்மலை, ஒட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டான், முல்லைத்தீவு என சகல இடங்களிலும் பரவலாக நிறுவப்பட்டிருந்தமை) பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்பட்டிருந்தன என்பதைப் பருமட்டாகப் புரிந்து கொள்ள உதவுவதாக அமையும் என்பதாலேயேயாகும்.

சங்கம் அமைத்திருந்த காவியப்பாடசாலை (Classic School) என்பது ஆறுமுகநாவலரின் மருமகன் கைலாயபிள்ளை அவர்களால் நாவலர் பாடசாலையில் நடத்தி வரப்பட்ட இலக்கிய, காவிய வகுப்புகளின் தொடர்ச்சி பின்பற்றப்பட்டமையைக் குறிக்கிறது. இவர்கள் பண்டித, பாலபண்டித தகைமைகளைப் பெறுவதற்கான கல்வியைப் பெறுவதற்கான பயிற்சிகளை வழங்கினர். சிங்கள – இரவுப்பாடசாலை (Sinhala Night School), என்பது பற்றிய விளக்கம் வழங்குவதற்குப் போதிய தரவுகள் கிடைக்கவில்லை.

| | பாடசாலைகள்,நெசவு நிலையங்கள்<br>ஆசிரியர் பயிற்சி கல்லூரி | ஆரம்ப<br>ஆண்டு |
|---|---|---|
| 1 | Analaitivu Sathasiva Bilingual School before | 1945 |
| 2 | Chernia Street Sanmarka Bodhini Bilingual School | 1926 |
| 3 | Idaikadu Buvaneshwari Bilingual School | 1925 |
| 4 | Pandateruppu Hindu English School | 1944 |
| 5 | Tinneveli Senguntha Saiva Bilingual School | 1934 |
| 6 | Arali North Ganesha Vidyasalai | 1926 |
| 7 | Illavalai Weaving Centre | before 1945 |
| 8 | Jaffna Spinning & Weaving Centre | before 1946 |
| 9 | Vidathatpalai Kamalasany Vidyasalai | before 1945 |
| 10 | Madduvil Kamalasani Weaving Center | before 1945 |
| 11 | Jaffna Classical School | before 1945 |
| 12 | Jaffna Saiva Training College | before 1945 |
| 13 | Jaffna Sinhalese Night School | before 1945 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 14 | Delft West Sivapragasa Vidyasalai | 1924 |
| 15 | Mathagal Vigneshwara Vidyasalai | 1924 |
| 16 | Chiviatheru Ananda (-Nanthanar) Vidyasalai | 1925 |
| 17 | Ilavalai Meihandan Vidyasalai | 1925 |
| 18 | Karampan West Sanmuganatha Vidyasalai | 1925 |
| 19 | Kokuvil West Gnanapandittha Vidyasalai | 1925 |
| 20 | Madduvil North Sandiramouleesa Vidyasalai | 1925 |
| 21 | Madduvil South Santhanayaki Vidyasalai | 1925 |
| 22 | Naranthanai North Ganesha Vidyasalai | 1925 |
| 23 | Palaly Sithivinayaga Vidyasalai | 1925 |
| 24 | Pooneriyn (Attai) Muttukumaraswamy Vidyasalai | 1925 |
| 25 | Pungudutivu Sithivinayaga Vidyasalai | 1925 |
| 26 | Saravanai Nageswary Vidyasalai | 1925 |
| 27 | Udupiddy Saivapragasa Vidyasalai | 1925 |
| 28 | Varany North Saivapiragasa Vidyasalai | 1925 |
| 29 | Anaikottai Balasubramania Vidyasalai | 1926 |
| 30 | Changanai West Sivapiragasa Vidyasalai | 1926 |
| 31 | Chulipuram North Arumuga Vidyasalai | 1926 |
| 32 | Delft East Subramania Vidyasalai | 1926 |
| 33 | Kopay North Saravanapanandha Vidyasalai | 1926 |
| 34 | Mandativu Karthigeya Vidyasalai | 1926 |
| 35 | Meesalai North Veerasingha | 1926 |
| 36 | Nawalapitiya Kathiresan College | 1926 |
| 37 | Nainativu Thillaiampala Vidyasalai | 1926 |
| 38 | Nunavil West Ganesha Vidyasalai | 1926 |
| 39 | Pannagam Meihandan Vidyasalai | 1926 |
| 40 | Pungudutivu Subramaniya Vidyasalai | 1926 |
| 41 | Arali North Hindu English School | 1927 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 42 | Changanai East Sivapiragasa Vidyasalai | 1927 |
| 43 | Changanai West Saivapiragasa Vidyasalai | 1927 |
| 44 | Delft West Saivapiragasa Vidyasalai | 1927 |
| 45 | Mullaitivu Hindu Tamil Mixed School | 1927 |
| 46 | Mulliyavalai Hindu Tamil Mixed School | 1927 |
| 47 | Myliddhi South Gnanothaiya Vidyasalai | 1927 |
| 48 | Saravanai Maheswary Vidyasalai | 1927 |
| 49 | Vaddukottai Thirugnanasampantha Vidyasalai | 1927 |
| 50 | Velanai East Saraswathy Vidyasalai | 1927 |
| 51 | Erlalai North Vigneshwara Vidyasalai | 1928 |
| 52 | Jaffna Hindu Home for Boys | 1928 |
| 53 | Karainagar West Meihandan Vidyasalai | 1928 |
| 54 | Karainagar East Maraignanasambanda Vidyasalai | 1928 |
| 55 | Kodigamam Thirunavukkkarasu Vidyasalai | 1928 |
| 56 | Koilakandy Mahaledchumy Vidyasalai | 1928 |
| 57 | Maravanpulo Sahalakalavally Vidyasalai | 1928 |
| 58 | Nunavil East Amirthambikai Vidyasalai | 1928 |
| 59 | Poonerin(Madduvil Nadu) Maheswary Vidyasalai | 1928 |
| 60 | Pungudutivu Shanmuganatha Vidyasalai | 1928 |
| 61 | Tinnevely Muttuthamby Vidyasalai | 1928 |
| 62 | Karampan East Sivagurunatha Vidyasalai | 1929 |
| 63 | Madduvil Kamalasany Vidyasalai | 1929 |
| 64 | Vaddukottai Thirunavukkarasu Vidyasalai | 1929 |
| 65 | Kachilaimadhu Suyambunatheeswara Vidyasalai | 1929 |
| 66 | Valaichenai Kailayapillaiyar (Hindu School?) | 1929 |
| 67 | Araly South West Murugamoorthy Vidyasalai | 1944 |
| 68 | Chavakachechery Sakthi Amman Vidyasalai | 1944 |
| 69 | Delft Centre Sellamah Vidyasalai | 1944 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 70 | Kachchai Nagamuttu Vidyasalai | 1944 |
| 71 | Kudathanai Sivasithambara Vidyasalai | 1944 |
| 72 | Navatkuli Ganesha -Kuga Vidyasalai | 1944 |
| 73 | ManKumpan Sri Vinayaga Vidyasalai | 1945 |
| 74 | Allaipiddy Parasakthi Vidyasalai | before 1945 |
| 75 | Annankai Paransothy Vidyasalai | before 1945 |
| 76 | Badulla Saraswathy Vidyasalai | before 1945 |
| 77 | Choranpattu Ganesha Vidyasalai | before 1945 |
| 78 | Chunnagam Nageswary Vidyasalai | before 1945 |
| 79 | Delft Sarapiddy Scandha Vidyasalai | before 1945 |
| 80 | Delft South East Ramanatha Vidyasalai | before 1945 |
| 81 | Inuvil Saivapiragasa Vidyasalai | before 1945 |
| 82 | KalvayalSanmuganand Vidyasalai | before 1945 |
| 83 | Kalvedditiddal Nagatambiran Vidyasalai | before 1945 |
| 84 | Kandarmadam Veeramakali Amman Vidyasalai | before 1945 |
| 85 | Kappothoe Ganesha Vidyasalai | before 1945 |
| 86 | Kathiripay Subramaniya Vidyasalai | before 1945 |
| 87 | Kerudavil Saiva Vidyasalai | before 1945 |
| 88 | Kokuvil East Namakal Vidyasalai | before 1945 |
| 89 | Morosumoddai Murugananda Vidyasalai | before 1945 |
| 90 | Naranthanai North West(Thambaddy) Vidyasalai | before 1945 |
| 91 | Paruthiadaippu Kathieshananda Vidyasalai | before 1945 |
| 92 | Pungudutivu Sir Duraisamy Vidyasalai | before 1945 |
| 93 | Pungudutivu(Madathuvelly)Kamalambikai Vidyasalai | before 1945 |
| 94 | Pungudutivu(Uraitivu) Thirunavukkarasu Vidyasalai | before 1945 |
| 95 | PungudutivuSir Duraswamy Vidyasalai | before 1945 |
| 96 | Punnalai Varathrajaperumal Vidyasalai | before 1945 |
| 97 | Sangarathai Sinnammah Vidyasalai | before 1945 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 98 | Thaiyiddy South Sivagurunatha Vidyasalai | before 1945 |
| 99 | Thanniyuttu Hindu Tamil Mixed School | before 1945 |
| 100 | Thattuvankoddy Kannaki Amman Vidyasalai | before 1945 |
| 101 | Thellipali North West Meihandan Vidyasalai | before 1945 |
| 102 | Tholpuram Vigneshwara Vidyasalai | before 1945 |
| 103 | Urelu Ganesha Vidyasalai | before 1945 |
| 104 | Vannarpannai North West Sri Waithilingha Vidyasalai | before 1945 |
| 105 | Varany Idaikurrichi Subramanya Vidyasalai | before 1945 |
| 106 | Varany Karampaikurrichi Manicka Vidyasalai | before 1945 |
| 107 | Vavuniya Saivapiragasa Vidyasalai | before 1945 |
| 108 | Kalaveddyathidal Nageswary Vidyasalai | 1946 |
| 109 | Valvetty Hindu School | 1946 |
| 110 | Alvayppr Sri Lanka Vidyasalai | 1958 |
| 111 | Anaipanthy Kurunathasamy Vidyasalai | 1958 |
| 112 | Atchuvely Thoppu Arulnandy Vidyasalai | 1958 |
| 113 | Avarangal Nadaraja Ramalinga Vidyasalai | 1958 |
| 114 | Changanai Nitchamam Ganesha Vidyasalai | 1958 |
| 115 | Chilaw Kusaly Hindu Tamil Mixed School | 1958 |
| 116 | Delft Veddakadu Bharathy Vidyasalai | 1958 |
| 117 | Kaddaively Gnanasariya Vidyasalai | 1958 |
| 118 | Kaithady EastVigneswara Vidyasalai | 1958 |
| 119 | Karainagar veerapiddy Sri Ganesha Vidyasalai | 1958 |
| 120 | Keerimalai Naguleswara Vidyasalai | 1958 |
| 121 | Kopay South Irupala Kanthaverl Vidyasalai | 1958 |
| 122 | Mathagal West Nunasai Murugamoorthy Vidyasalai | 1958 |
| 123 | Moolai Saivapiragasa (Registered Attached)Vidyasalai | 1958 |
| 124 | Oddusuddan Sinnathamby Vidyasalai | 1958 |
| 125 | Pointpedro Nagarcoil Nageswari Vidyasalai | 1958 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 126 | Pointpedro Thiccam Sithivinayagar Vidyasalai | 1958 |
| 127 | Punnalaikadduvan Hindu Tamil Mixed School | 1958 |
| 128 | Puthukkudyiruppu Sri Subramaniya Vidyasalai | 1958 |
| 129 | Puttalam Mundel Kamalambikai Vidyasalai | 1958 |
| 130 | Thavady Sanmuganatha( Registered- Attached) Vidyasalai | 1958 |
| 131 | Vadamaratchi East Vettilaikerni Parameswary Vidyasalai | 1958 |
| 132 | Vavuniya Koilputhukulam Ganesha Vidyasalai | 1958 |
| 133 | Vavuniya Asikulam Srinivasan Vidyasalai | 1958 |
| 134 | Vavuniya Peyadikoolankulam Sri Murugan Vidyasalai | 1958 |
| 135 | Veeravil Hindu Tamil Mixed School | 1958 |
| 136 | Velanai North Arthisoody Vidyasalai | 1958 |
| 137 | Atchelu Saivapiragasa Vidyasalai | 1958 |
| 138 | Ayilady HinduT.M.School | 1958 |
| 139 | Chemmalai T.M.School | 1958 |
| 140 | Delft North West Mangayarkarasy Vidyasalai | 1958 |
| 141 | Delft North West Maheshwary Vidyasalai | 1958 |
| 142 | Earlalai Centre Vidyasalai | 1958 |
| 143 | Eluvaitivu Murugaivel Vidyasalai | 1958 |
| 144 | Kaithady Nunavil Vidyasalai | 1958 |
| 145 | Kaithady South Hindu T.M.School | 1958 |
| 146 | Kalviyangadu Hindu Tamil Mixed School | 1958 |
| 147 | Karainagar Subramaniya Vidyasalai | 1958 |
| 148 | Karraveddy East Yarkaru-Vinayaga Vidyasalai | 1958 |
| 149 | Manthuvil Bharathy Vidyasalai | 1958 |
| 150 | Mareesankoodal Subramaniya Vidyasalai | 1958 |
| 151 | Maruthankerny Sanmuga Vidyasalai | 1958 |
| 152 | Meesalai South East Kamalambihai Vidyasalai | 1958 |
| 153 | Meesalai South Vigneshwara Vidyasalai | 1958 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| 154 | Mullaitivu PuthukudyiruppuSri Subramania Vidyasalai | 1958 |
| 155 | Mullivaikal Vidyasalai | 1958 |
| 156 | Nainativu north Nagaboosani Vidyasalai | 1958 |
| 157 | Nainativu South Ganesha Vidyasalai | 1958 |
| 158 | Navatkadu Ganesha Vidyasalai | 1958 |
| 159 | Nayanmarkaddu Maheswary Vidyasalai | 1958 |
| 160 | Pambaimadu Subramanya Vidyasalai | 1958 |
| 161 | Poyiddy Saraswathy Vidyasalai | 1958 |
| 162 | Pungudutivu Raja Rajeswary Vidyasalai | 1958 |
| 163 | Thanankilppu Hindu Tamil Mixed School | 1958 |
| 164 | Thiruketheeswaram HinduT.M.School | 1958 |
| 165 | Thumpalai Sivapiragasa Vidyasalai | 1958 |
| 166 | Vasavillan Sri Velluppillai Vidyasalai | 1958 |
| 167 | Velanai South East Iyanar Vidyasalai | 1958 |
| 168 | Vettilaikerni Parameshwary Vidyasalai | 1958 |
| 169 | Alvai South Hindu Tamil Mixed School | 1958(new) |
| 170 | Chilaw Maruthankulam Saivapiragasa Vidyasalai | 1958(new) |
| 171 | Eluthumadduval Sri Vigneswara Vidyasalai | 1958(new) |
| 172 | Mankulam Olimadu Hindu Tamil Mixed school | 1958(new) |
| 173 | Mullaitivu) Silavathai Vidyasalai | 1958(new) |
| 174 | Navaly-Manipay Addakiri Vidyasalai | 1958(new) |
| 175 | Pallavarayankaddu Hindu Tamil mixed School | 1958(new) |
| 176 | Pandaterippu) Santhai Vidyasalai | 1958(new) |
| 177 | Paranthan Vaddakachy Iyanaar Vidyasalai | 1958(new) |
| 178 | Pooneryn Vinasiodai Hindu Tamil Mixed School | 1958(new) |
| 179 | Punnalaikadduvan Evinai Hindu Tamil Mixed School | 1958(new) |
| 180 | Puttoor Puthakaladdy Hindu Tamil Mixed School | 1958(new) |
| 181 | Udupiddy North Hindu Tamil Mixed School | 1958(new) |
| 182 | Tharmapuram Hindu Tamil Mixed School | 1958(new) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 ஆம் ஆண்டில் சைவ ஆசிரிய கலாசாலை

THE HINDU BOARD.



The Jaffna Saiva Training Institute, Tirunelvely.


1930.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 ஆம் ஆண்டில் சைவ ஆசிரிய கலாசாலையின் விடுதி அலுவலர்கள் ,புகுமுக மாணவர்கள் மற்றும் அனாதை இல்ல மாணவர்கள்

THE HINDU BOARD.




he Boarders of The Saiva Training Institute, Entrance Class and the Saiva Orphan

1930.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வித்தியா விருத்திச் சங்கம் இன்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் தனது கலைமாணி (வரலாறு) சிறப்புப்பட்டக் கல்வியை 1975 – 1979காலப்பகுதியில்இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகத்தில் கற்றார். பேராசிரியர் இந்திரபாலாவின் மாணவியான இவர் 1981 தொடக்கம் முதலில் விரிவுரையாள ராவும் அதனைத் தொடர்ந்துசிரேஷ்ட விரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் பணிபுரிந்து வருகிறார். 1980களில் உருவாக்கப்பட்ட "பெண்கள் ஆய்வு வட்டத்தின்" ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். இவர் பெண்ணிய சிந்தனைகள், சமூகவரலாறு பற்றிய விடயங்களில் ஈடுபாடுள்ளவர்.

EZHUTHTHU

ISBN 978-955-41-1990-1
9 789554 119901 >

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org